விலை ரூ. 20/=

ஈழநாடு
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Eelanadu

13.09.2020 ஞாயிற்றுக்கிழமை

## ஐ.தே.கவின் புதிய தலைவர் யார்? அறிவிப்பு அடுத்த வாரம் வரலாம்

கொழும்பு, செப். 13

ஐக்கிய தேசியக் கட்சியின் புதிய தலைவர் தொடர்பான அறிவிப்பு அடுத்த வாரம் வெளியாகலாம் எனக் கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

கட்சியின் சிரேஷ்ட உறுப்பினர்கள் கடந்த சில நாட்களாக இது தொடர்பான தீவிர பேச்சுக்களில் ஈடுபட்டனர் என அவர் குறிப்பிட்டார்.

"நாங்கள் வெற்றிகரமான பேச்சுக்களை மேற்கொண்டு அடுத்த கட்டத்தை நோக்கி நகர்ந்துள்ளோம்.

02

# சுமந்திரனை வைத்திருந்தால் தமிழ் அரசுக் கட்சிக்கு நாசம்!

## உடனடியாக நீக்குங்கள் என்கிறார் கே.வி.தவராசா ஒழுக்காற்றுக் குழுத் தலைவருக்கு நீண்ட கடிதம்



கொழும்பு, செப் 13

பாராளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனைத் தொடர்ந்தும் தமிழ் அரசுக் கட்சியில் வைத்திருந்தால் ஐ.தே.கவுக்கு ஏற்பட்டதை விட மோசமான நிலைமை ஏற்படும் எனச் சுட்டிக்காட்டியுள்ள அதன் கொழும்புக் கிளைத் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி கே.வி.தவராசா, உடனடியாக அவரைக் கட்சியை விட்டு நீக்கவேண்டுமெனவும் கோரிக்கை விடுத்துள்ளார்.

02

## ராஜித உள்ளிட்ட மூவருக்கு அழைப்பு

கொழும்பு, செப் 13

நாடாளுமன்ற உறுப்பினர் ராஜித சேனாரட்ன, உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.எஸ் திசேரா, தற்போது வெளிநாட்டில் தங்கியுள்ள பொலிஸ் பரிசோதகர் நிஷாந்த டி சில்வா ஆகியோருக்கு அரசியல் பழிவாங்கல்கள் தொடர்பில் ஆராயும் ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது.

அவர்களை எதிர்வரும் 25 ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## மீசாலைப் பகுதியில் ரவுடிகள் அட்டகாசம்

### குடும்பப் பெண் மீது வாள்வெட்டு

யாழ்ப்பாணம், செப் 13

தென்மராட்சி, மீசாலைப் பகுதியில் குடும்பப் பெண் மீது வாள்வெட்டுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. நேற்று இரவு 8.45 மணியளவில் இந்தத் தாக்கு தல் இடம்பெற்றது.

முகத்தை கறுப்புத் துணிகளால் மறைத்தபடி சென்ற வாள்வெட்டுக்குழு, குடும்பத் தலைவியான பெண்ணை சரமாரியாக வெட்டியுள்ளது.

கை, கால், உடம்பு எனச் சகட்டு மேனிக்கு வெட்டப்பட்டதில் அந்தப் பெண் உயிராபத்தான நிலையில் சாவகச்சேரி ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு, மேலதிக சிக்சைக் காக யாழ் போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டுள்ளார்.

ஸ்ரீதரன் பவானி (வயது-40) என்ற குடும்பப் பெண்ணே தாக்குதலுக்கு இலக்காகியுள்ளார்.

## வடமராட்சி மீனவர்கள் நாளை மௌன பேரணி

### இந்திய மீனவர் ஊடுருவலை கண்டித்து

யாழ்ப்பாணம், செப் 13

இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி அத்துமீறி மீன்பிடியில் ஈடுபடுவதால், உள்ளூர் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்படைவதுடன் தொழில் உபகரணங்களும் நாசமாகின்றன.

இதனைக் கண்டித்து வடமராட்சி

02

## வவுனியாவில் தப்பியவர் மன்னாரில் பிடிபட்டார்!

மன்னார், செப்.13

வவுனியா, பெரியகாடு இராணுவ முகாம் தனிமைப் படுத்தல் நிலையத்தில் தனிமைப்படுத்தலில் இருந்து தப்பியவர் மன்னாரில் வைத்து இராணுவத்தினரால்

02

## புதிய அரசமைப்புக்காகவே கோட்டாபயவுக்கு அதிகாரம்!

### மக்கள் வழங்கினர் என மகா சங்கம் கூறுகிறது



கொழும்பு, செப்.13

நாட்டிற்குப் பொருத்தமான புதிய அரசியலமைப்பை தயாரிப்பதற்காகவே மக்கள், ஜனாதிபதி கோட்டாபய

02

## இலங்கையில் பிரிவினை என்ற வார்த்தைக்குக்கூட இடமில்லை

### இரண்டு நிர்வாகமும் இல்லை, இரண்டு ராணுவ கட்டமைப்பும் இல்லை என்கிறார் யாழ்.தளபதி



யாழ்ப்பாணம், செப்.13

இங்கே இரண்டு நாடுமில்லை. இரண்டு நிர்வாகமும் இல்லை. இரண்டு இராணுவக் கட்டமைப்பு என்ற கதைக்கும் இடமில்லை. நாம் அனைவரும், இலங்கையர்கள் என்ற ஒரு குடையின் கீழ் ஒற்றுமையாக செயற்பட வேண்டும். இங்கே பிரிவினை என்ற வார்த்தைக்குக்கூட இடமில்லை என யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் செனரத் பண்டார உறுதிபடத் தெரிவித்தார்.

நல்லை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான சம்பந்த

02

## போதைப் பொருட்களுடன் ஐவர் வவுனியாவில் கைது!



வவுனியா, செப் 13

வவுனியா - சிதம்பரபுரம், தேக்கவத்தை, மாமடு ஆகிய பகுதிகளிலேயே ஹெரோயின் மற்றும்கஞ்சா போதைப் பொருட்களுடன் 5 பேர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளனர்.

02

## சுமந்திரனை...

தமிழ் அரசு கட்சியின் சிரேஷ்ட துணைத்தலைவரும் கட்சியின் ஒழுக்காற்றுக் குழுத் தலைவருமான சி.வீ.கே.சிவஞானத்துக்கு எழுதியுள்ள நீண்ட கடிதத்திலேயே அவர் இவ்வாறு குறிப்பிட்டிருக்கின்றார்.

சுமந்திரன் கட்சியை விட்டு நீக்கப்படவேண்டியமைகான காரணங்களையும் அவர் தனது கடிதத்தில் பட்டியலிட்டுள்ளார்.

அந்தக் கடிதத்தின் சுருக்கம் வருமாறு: -

திரு. சி.வி.கே.சிவஞானம்
சிரேஸ்ட துணைத்தலைவர்
இலங்கைத் தமிழரசுக் கட்சி

தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் ஆப்பிரகாம் மதியாபரணம் சுமந்திரன் கட்சியிலிருந்து நீக்கப்பட வேண்டியவர்.

நான் தமிழரசுக் கட்சியில் இணைந்து செயல்படுவது தமிழ் தேசியத்தின் மீது நான் கொண்ட பற்றினால் மட்டுமே. கடந்த பத்து ஆண்டுகளாகக் கட்சியில் பல பதவிகள் எனக்கு வழங்கப்பட்டன. எந்தப் பதவிக்காகவோ அல்லது கொழும்பு மாவட்டத்தில் போட்டியிடவேண்டுமென்றோ அல்லது தேசிய பட்டியல் மூலம் நாடாளுமன்றம் செல்ல வேண்டுமென்றோ இன்றுவரை கட்சித் தலைமைத்துவத்திடம் எந்த வேண்டுகோள்களையும் நான் முன் வைத்தவனல்லன். வைக்கப் போகின்றவனுமல்லன் என்பது மட்டுமன்றி 10 வருடங்களாக தலைமையகத்தின் வேண்டுகோளுக்கும் அறிவுறுத்தலுக்கும் அமைய கொழும்புக் கிளையைச் சொந்த நிதியிலேயே நடத்தி வருகின்றேன். கட்சியிலிருந்து எந்தச் சூழ்நிலையிலும் ஒரு சதமேனும் நிதி உதவி பெற்றவனல்லன். ஆனாலும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் இருப்பைப் பாதிக்கும் செயல்பாடுகளைக் கூறவேண்டிய தார்மீகக் கடமையும் கடப்பாடும் எனக்குண்டு என்பதனாலேயே இந்த வேண்டுகோளை முன்வைக்கின்றேன்.

2020ஆம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் கட்சி பாரிய பின்னடைவைச் சந்தித்தமைக்கு முக்கிய காரணகர்த்தாவாகச் செயல்பட்டவர் ஆபிரகாம் மதியாபரணம் சுமந்திரன். கட்சியின் கட்டுக்கோப்பையும் மீறிப் பொறுப்பற்ற முறையில் தான்தோன்றித் தனமாக தன்னிச்சையாக எடுத்த முடிவுகளினாலும் செயற்பாடுகளினாலும் தமிழ்த் தேசிய உணர்வாளர்களின் மனதைப் புண்படுத்தி பல்லாயிரக் கணக்கான வாக்குகளை விசேடமாக தமிழரசுக்கட்சி இழந்தமைக்கு ஆபிரகாம் மதியாபரணம் சுமந்திரன் முக்கிய காரணகர்தா ஆவார்.

ஆபிரகாம் மதியாபரணம் சுமந்திரன் கட்சியிலிருந்து உடனடியாக நீக்கப்படவேண்டும். இவர் கட்சியிலிருந்து நீக்கப்படாவிடின் ஏழு தசாப்தங்களுக்கு மேலாக நிலைநிறுத்தப்பட்ட தமிழரின் உரிமைகளுக்கான அர்ப்பணிப்புகளும் தியாகங்களும் அர்த்தமிழந்து போவதோடு தாயகத் தேசிய கொள்கைகளும் தமிழரசுக்கட்சியும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் பெறுமதியிழந்து அழிந்தே போகும் நிலை நிச்சயம் உருவாகும் என்பதைக் கவனத்தில்கொள்ள வேண்டும். கட்சியைப் தொடர்ந்து பின்னடைவுக்கு இட்டுச் சென்று வீழ்ச்சிப் பாதையில் நகர்த்திச் சென்று கொண்டிருக்கும் சுமந்திரனைக் கட்சியிலிருந்து உடனடியாக நீக்காதுவிட்டால் அது பாரிய வரலாற்றுத் தவறாக அமையும் என்பதையும் கருத்தில் கொள்ள வேண்டும்.

ஆ.சுமந்திரனை கட்சியிலிருந்து நீக்கப்படுவதற்கு பல காரணங்களான

(1) 2015ஆம் ஆண்டின் நல்லாட்சியில் அரசமைப்பு விவகாரம்

(2) தமிழ் தேசிய கொள்கை நீக்கல் அரசியல்.

(3) ஆயுதப்போராட்டத்தைக் கொச்சைப்படுத்தும் கருத்துக்கள்

(4) தமிழ் ஊடகங்கள் மீது அவதூறான கருத்துக்கள்

(5) இனப்படுகொலை- சர்வதேச விசாரணை முடிந்து விட்டது

(6) ஜெனிவா விவகாரங்களைக் கையாண்ட முறை

(7) தேசிய அரசியலுக்கு கொடுக்கப்பட்ட முன்னுரிமை தமிழ்த் தேசிய அரசியலுக்கு வழங்காமை (கடும் அரச ஆதரவு)

(8) அரசியல் கைதிகள், காணாமல் ஆக்கப்பட்டோர் விவகாரம்

(1-8) ஒன்றிலிருந்து எட்டுவரை குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களில் ஆ.சுமந்திரனின் செயல்பாட்டை விவரமாக இங்கே குறிப்பிடுவதை கட்சியின் எதிர்கால நலன் காரணமாக தவிர்த்துள்ளேன்.

மேலே குறிப்பிடப்பட்ட 8 விடயங்கள் உட்பட கீழே விவரமாக பதியப் பட்டுள்ள 12 விடயங்களுமான சாட்சியங்களின் அடிப்படையில் மேலதிக விசாரணைகளின்றி தமிழரசுக்கட்சியின் உறுப்பினர் ஆ.சுமந்திரன் கட்சியிலிருந்து நீக்கப்படலாம்.

சாட்சியங்களின் அடிப்படையில் தமிழரசுக் கட்சியின் உறுப்பினர் சுமந்திரன் கட்சியிலிருந்து நீக்கப்படலாம். இது தொடர்பில் தலைமைத்துவம் உடனடியாகச் செயல்படாவிடின் ஐக்கிய தேசியக் கட்சிக்கு ஏற்பட்டிருக்கும் நிலைமையை விட மிக மோசமான நிலைமை தமிழரசுக்கட்சிக்கு ஏற்படுத்தப்பட்டு தமிழும் தேசியமும் அழிக்கப்பட்டுவிடும்-என்று தவராசா குறிப்பிட்டுள்ளார்.

இந்தக் கடிதத்தின் பிரதிகள் கூட்டமைப்பின் தலைவர் இரா சம்பந்தன், தமிழ் அரசுக் கட்சித் தலைவர் மாவை சேனாதிராசா மற்றும் மத்திய குழு உறுப்பினர்கள் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளன.

## இலங்கையில்...

பரமாச்சாரிய சுவாமிகளை நேற்றுக் காலை சந்தித்த பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நான் பதவியேற்ற பின்னர், முதன்முறையாக இந்து மதக் குருவை சந்தித்திருக்கின்றேன்.

இந்தச் சந்திப்பில் மிகவும் ஆக்கபூர்வமான பல விடயங்கள் தொடர்பில் ஆராய்ந்திருக்கின்றேன்.

இராணுவத்தினர் ஆகிய எமது பிரதான நோக்கம் தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்துவ தோடு நல்லிணக்கத்தை ஏற்படுத்துதலாகும்.

இந்த அரசு பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் பல்வேறு முன்மொழிவுகளை மக்கள் நலன் சார்ந்து மேற்கொள்ளவுள்ளது.

குறிப்பாக, யாழ். மாவட்டக் கட்டளைத் தலைமையகமானது வடக்கு மக்களுக்கு உதவி செய்வதற்கும் இந்தப் பிரதேசத்தை அபிவிருத்தி செய்வதற்கும், அத்தோடு இப்பிரதேச மக்களின் வாழ்வாதாரத்தை உயர்த்தும் வேலைத்திட்டங்களை முன்னெடுக்கவுள்ளது. இவ்வாறான திட்டங்களை இராணுவம் முழுவீச்சுடன் செயற்படுத்தும். அத்தோடு எமது பிரதேசத்தில் சமாதானம் முக்கியமானது. இலங்கையர்கள் அனைவரும், ஒரே நாட்டவர்கள் நாம் என்ற கொள்கைக்கு இணங்க ஒற்றுமையாக இந்த நாட்டில் வசித்து வருகிறோம.

இங்கே இரண்டு நாடுமில்லை. இரண்டு நிர்வாகமும் இல்லை. இரண்டு இராணுவ கட்டமைப்பு என்ற கதைக்கும் இடமுமில்லை. நாம் அனைவரும் இலங்கையர்கள் என்ற ஒரு குடையின் கீழ் ஒற்றுமையாக செயற்பட வேண்டும். இங்கே பிரிவினை என்ற வார்த்தைக்குக்கூட இடமில்லை.

எனவே, யாழ்.மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதி என்ற வகையில் நான், யாழ். மாவட்டத்தின் பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்துவேன். அத்தோடு மக்கள் சந்தோசமாக வாழ்வதற்கு உரிய வழிவகைகளை நான் ஏற்படுத்துவேன்- என்றார்.

# நாய்க்குட்டியால் ஏற்பட்ட மோதலில் ஒருவர் மரணம்



கொழும்பு, செப் 13

வீடொன்றில் வளர்க்கப்பட்டுள்ள நாய்க் குட்டி காரணமாக ஏற்பட்ட தகராறில் ஒருவர் உயிரிழந்துள்ள சம்பவமொன்று கண்டி- தெல்தொடவத்த பிரதேசத்தில் பதிவாகியுள்ளது.

பிரதேசத்தில் உள்ள வீடொன்றில் வளர்த்துவரப்பட்ட நாய்க் குட்டியொன்று கடந்த 10ஆம் திகதி பிறிதொரு நபரின் வீட்டுக்குச் சென்றுள்ளது.

பின்னர் நாய்க்குட்டி தொடர்பில் தகவலறிந்த நாய்க்குட்டியின் உரிமையாளர் அந்த நபரின் வீட்டுக்கு சென்றுள்ளார். இதன்போது இருவருக்கும் இடையில் வாக்குவாதம் ஏற்பட்டு பின்னர் அது மோதலாக மாறியுள்ளது.

இருவருக்கிடையிலான மோதலில் நாய்க்குட்டியின் உரிமையாளர் மேற்கொண்ட தாக்குதலில் மற்றைய நபர் பலத்த காயமடைந்து கண்டி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டதன் பின்னர் நேற்று முன் தினம் உயிரிழந்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் நாய்க்குட்டியின் உரிமையாளர் கைது செய்யப்பட்டுள்ளார்.

## புதிய...

ராஜபக்ஷவுக்குப் பெரும்பான்மைப் பலத்தை வழங்கியுள்ளனர் என மகா சங்கத்தினர் தெரிவித்துள்ளனர்.

மக்கள் எதிர்பார்ப்பைக் கட்டம் கட்டமாக நிறைவேற்றி தன்னிறைவான பொருளாதாரம் ஒன்றைக் கட்டியெழுப்புவதற்கான ஜனாதிபதியின் பயணத்தை மகிழ்ச்சியுடன் பார்த்துக் கொண்டிருப்பதாகவும் மகா சங்கத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

வரலாற்று முக்கியத்துவமிக்க அநுராதபுரம் அட்டமஸ்தானவில் சமயக் கிரியைகளில் ஈடுபட்டு ஆசிர்வாதங்களைப் பெற்றுக்கொண்ட ஜனாதிபதி நேற்று முற்பகல் லங்காராமய, மிரிசவெட்டிய மற்றும் ஸ்ரீசம்புத்த ஜயந்தி விகாரைகளுக்குச் சென்ற வேளையிலேயே விகாராதிகாரி தேரர்கள் மேற்கண்டவாறு தெரிவித்தனர்.

## வடமராட்சி...

மீனவர்கள் மௌன ஊர்வலம் ஒன்றை நாளை திங்கட்கிழமை முன்னெடுக்கவுள்ளனர்.

வடமராட்சிக் கடற்ப்பரப்பில் கடந்த சில தினங்களாக இந்திய மீனவர்கள் எல்லை தாண்டி மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். கரையில் இருந்து சுமார் ஒன்பது கடல் மைல் தூரத்தில் நின்று அவர்கள் மீன்பிடியில் ஈடுபட்டு வருகின்றனர். தடை செய்யப்பட்ட ட்றோலர் படகுகளைப் பயன்படுத்தியே அவர்கள் தொழில் புரிகின்றனர்.

இதனால் வடமராட்சி மீனவர்களது வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ளதாகவும், கடலில் விடப்படும் பல இலட்சம் ரூபா பெறுமதியான வலைகளை அறுத்து நாசம் செய்யப்பட்டுள்ளதாகவும் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

கடந்த மூன்று நாட்களாக மிக அதிகளவில் இந்திய மீனவர்களின் அத்துமீறல் இடம்பெற்று வருகின்றது.

இதனைக் கண்டித்து வடமராட்சி மீனவர்கள், வாயை மூடிக் கட்டி மௌன கவனயீர்ப்பு ஊர்வலம் ஒன்றை நாளை திங்கட்கிழமை முன்னெடுக்கவுள்ளனர்.

நல்லூர் முன்றலில் இருந்து காலை 10 மணிக்கு ஆரம்பமாகும் இந்த மௌன பேரணி, இந்தியத் தூதரகத்தைச் சென்றடைந்து அங்கு இந்தியத் துணைத் தூதரிடம் மகஜர் ஒன்று கையளிக்கப்படும்.

தொடர்ந்து கடற்றொழில் நீரியல் வளத்துறை அமைச்சரின் அலுவலகத்துக்குச் சென்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவிடமும் மகஜர் ஒன்றை மீனவர்கள் கையளிக்கவுள்ளனர்.

அதன் பின்னர் தொடர்ந்து கடற்றொழில் நீரியல் வளத்துறை திணைக்களப் பணிப்பாளர் , மாவட்ட செயலர், வடக்கு மாகாண ஆளுநர் ஆகியோருக்கும் மகஜர் கையளிப்புடன் போராட்டம் நிறைவடையும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## ஐ.தே.கவின்...

நீண்ட காலத்தின் பின்னர் நாங்கள் இணக்கப்பாட்டை நோக்கிச் செல்கின்றோம்.

ஐக்கிய தேசியக் கட்சியை முற்றாக மாற்றுவது குறித்தும் கடந்த வாரம் பேச்சுக்கள் இடம்பெற்றன" எனத் தெரிவித்த அவர், வேறு முக்கிய மாற்றங்கள் இடம்பெறலாம் எனவும் கூறினார்.

கட்சியின் புதிய தலைவர்களாக வரக்கூடியவர்களின் இறுதிப் பட்டியலொன்று தயாரிக்கப்பட்டுள்ளது எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

## வவுனியாவில்...

கைது செய்யப்பட்டார்.

வெளிநாட்டிலிருந்து விசேட விமானத்தில் அழைத்து வரப்பட்டு தங்கவைக்கப்பட்டிருந்த சிலாபம் மாதம்பே பகுதியைச் சேர்ந்த விஜித றுவான் குணவர்த்தன (வயது-36) என்பவர் நேற்று முன்தினம் தப்பிச் சென்றிருந்தார்.

இந்நிலையில், அவர் நேற்றுச் சனிக்கிழமை மாலை 6.30 மணியளவில் மன்னார் சௌத்பார் ரயில் நிலையப் பகுதியில் வைத்து இராணுவத்தினரால் கைதுசெய்யப்பட்டார்.

அந்த நபரை மீண்டும் வவுனியா பெரியகாடு, இராணுவ முகாம் தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அழைத்துச்செல்ல இராணுவத்தினர் நடவடிக்கை எடுத்துள்ளனர்.(முன்னர் வந்த செய்தி 12 ஆம் பக்கத்தில்)

## போதைப்...

வவுனியா பொலிஸாருக்கு கிடைத்த தகவலையடுத்து மேற்கொள்ளப்பட்ட விசேட நடவடிக்கைகளின்போதே போதைப் பொருட்கள் மீட்கப்பட்டன.

வவுனியா மாமடுப் பிரதேசத்தில் மேற்கொள்ளப்பட்ட சோதனையின்போது 2 கிலோ கேரளக் கஞ்சா மற்றும் 2 கிராம் ஹெரோயின் என்பவற்றை மோட்டார் சைக்கிளில் எடுத்துச் சென்ற இருவர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மோட்டார் சைக்கிளும் தடுத்து வைக்கப்பட்டுள்ளது.

மேலும், சிதம்பரபுரம் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட சோதனை நடவடிக்கையின் போது 420 மில்லிகிராம் மற்றும் 310 மில்லி கிராம் ஹெரோயின் போதைப் பொருளை உடைமையில் வைத்திருந்த இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அத்துடன், தேக்கவத்தைப் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட் சோதனையின்போது 390 மில்லி கிராம் ஹெரோயின் மற்றும் 43,000 ரூபா பணம் என்பவற்றுடன் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவ்வாறு கைது செய்யப்பட்ட 5 பேரிடமும் விசாரணைகளை முன்னெடுத்துள்ள பொலிஸார் அவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

ஈழநாடு
Eelanadu ඊළනාඩු
13.08.2020 ஞாயிற்றுக்கிழமை
சார்வரி, ஆவணி 27

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

gmail:- eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 492 7805

# மகிந்த கூறுவதை கோட்டாவும் கூறுவாரா?

பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, புலம்பெயர் மக்கள் அச்சமின்றி இலங்கையில் முதலீடுகளை செய்யுமாறு அழைப்பு விடுத்திருக்கின்றார். இலங்கையின் புலம்பெயர் சமூகம் என்பது அடிப்படையில் இலங்கையிலிருந்து வெளியேறிய ஒரு தொகை ஈழத் தமிழ் மக்களையே குறிக்கும். சுமார் பத்து லட்சத்திற்கு மேற்பட்ட தமிழர்கள் இவ்வாறு வெளிநாடுகளில் வாழ்ந்து வருகின்றனர். கனடா, இங்கிலாந்து, அமெரிக்கா என பல்வேறு மேற்குலக நாடுகளில் ஆழமாக வேரூன்றியிருக்கும் தமிழ் மக்கள், குறித்த நாடுகளின் அரசியலிலும் செல்வாக்குள்ளவர்களாக உயர்ந்திருக்கின்றனர். குறிப்பாக, கனடாவின் ஆளும் அரசாங்கத்தை தங்களை நோக்கித் திருப்பக் கூடிய ஆளுமையுடன் இவர்கள் இருக்கின்றனர். அதே போன்று அமெரிக்க மட்டத்திலும் அவர்களது தொடர்புகளும் ஊடாட்டமும் அண்மைக்காலமாக அதிகரித்துவருகின்றது. இவ்வாறானவர்களை நோக்கியே மகிந்த ராஜபக்ஷ அழைப்பு விடுத்திருக்கின்றார்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைமையில் இடம்பெற்ற தனி நாட்டுக்கான ஆயுதப் போராட்டத்தின் பிரதான நிதி மூலமாக இருந்தவர்களும் இவர்களே! ராஜீவ் காந்தியின் கொலையைத் தொடர்ந்து, விடுதலைப் புலிகள் இயக்கம் இந்தியாவில் செயற்படமுடியாதளவிற்கு தடை விதிக்கப்பட்டது. இதனைத் தொடர்தே விடுதலைப் புலிகள் இயக்கம் மேற்குலகை நோக்கி நகர்ந்தது. 2009இல் யுத்தம் முடிவுறும் வரையில் மேற்கு நாடுகளே விடுதலைப் புலிகளின் ஆயுதப் போராட்டத்திற்கான பிரதானமான பின் தளமாகவும் இருந்தன. இந்த காலத்திலேயே, புலம்பெயர் சமூகம் என்னும் ஒரு புதிய சமூகப்பிரிவும், தமிழ்த் தேசிய அரசியலில் ஒரு பிரிக்கவியலாத அங்கமாகப் மாறிப் போனது. யுத்தத்திற்கு பின்னரான சூழலில், வடக்கு கிழக்கில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு பல்வேறு வழிகளிலும் புலம்பெயர் சமூகமே உறுதுணையாக இருந்து வருகின்றது. அதேவேளை, 2009இற்கு பின்னர் சர்வதேச அரங்குகளில் தமிழ் மக்களின் நீதிக்கான குரலாகவும் புலம்பெயர் சமூகமே செயற்பட்டுவருகின்றது.

புலம்பெயர் சமூகத்தினால், யுத்தத்தால் பாதிக்கப்பட்ட வடக்கு கிழக்குப் பகுதிகளில் பெருமளவு முதலீடுகளை செய்ய முடியுமென்பது உண்மையே! அதற்கான போதிய ஆற்றலை புலம்பெயர் சமூகம் கொண்ருக்கின்றது. ஆனாலும் அவர்கள் மத்தியில் தயக்கங்கள் உண்டு. இது தொடர்பில் தமிழ் சமூகத்தின் மத்தியிலும் கூட கேள்விகள் உண்டு. இதிலுள்ள சிக்கலான பக்கத்தை விளங்கிக்கொள்ள வேண்டியது அவசியம். இல்லாவிட்டால் அரசாங்கம் கூறுவதே சரியென்னும் பார்வை உருவாகிவிடலாம்.

புலம்பெயர் தமிழ் மக்கள் பெருமளவு முதலீடுகளை மேற்கொள்வதில் இரண்டு பிரதான பிரச்னைகள் உண்டு. ஒன்று, அவர்களின் முதலீட்டுக்கான பாதுகாப்பு, அடுத்தது, அரசாங்கத்தின் மீதான நம்பிக்கை. இந்த இரண்டும் சரியாக இருக்கும் போதுதான் ஒருவர் முதலீடுகளை செய்வதற்கு விரும்புவார். புலம்பெயர் சமூகத்தை பொறுத்தவரையில் அவ்வாறானதொரு நம்பிக்கை இதுவரையில் ஏற்படவில்லை. அவ்வாறானதொரு நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கான முயற்சிகளில் அரசாங்கமும் இதுவரையில் ஈடுபடவில்லை. அழைப்பு விடுவதன் மூலம் மட்டும் நம்பிக்கையை கட்டியெழுப்ப முடியாது.

மாகாண சபைகளுக்கான அதிகாரங்களை ஆளுநரின் தலையீடின்றி, சுயமாக கையாளக் கூடிதோர் அரசியல் சூழல் இருக்கின்ற நிலையில்தான், தமிழ் பகுதிகளில் தமிழரின் முதலீடுகள் அதிகரிக்கும். புலம்பெயர் சமூகத்திற்கு அழைப்பு விடுவதற்கு முன்னர் மாகாண சபைகள், மத்திய அரசின் தேவையற்ற தலையீடின்றி செயற்படுவதற்கான சூழலை அரசாங்கம் உறுதிப்படுத்த வேண்டும். முக்கியமாக, ஆளுநரின் பல்லை பிடுங்கும் அதிகாரங்கள் முதலமைச்சரிடம் இருக்க வேண்டும். பிரதமர் மகிந்த ராஜபக்ஷ புலம்பெயர் சமூகத்திற்கு அழைப்பு விடுக்கின்றார். ஆனால், அவரது சகோதரர் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இது தொடர்பில் எவ்வாறான நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றார்? இந்த இடத்திலேயே பலமானதொரு சந்தேகமுண்டு. அவரும் பகிரங்கமாக தனது கருத்துக்களை முன்வைக்க வேண்டும்.

# அவுஸ்திரேலியாவுக்கு போதைப்பொருள் கடத்த விமான ஊழியர்களுக்கு பயிற்சி கொடுத்த கும்பல்!

மலேசியாவைச் சேர்ந்த விமானிகளும், விமானப் பணியாளர்களும், அவுஸ்திரேலியாவுக் குப் போதைப் பொருள் கடத்தியதாகவும், இதற்காக கணிசமான தொகையை "சன்மானம்" ஆக பெற்றதாகவும் ஒரு தகவல் வெளியாகியுள்ளது.

'பிரிஸ்பேன் டைம்ஸ்" என்ற ஊடகம் வெளியிட்டுள்ள செய்தியில் 'மலேசியன் ஏர் லைன்ஸ்" மற்றும் 'மலிண்டோ ஏர்" விமான நிறுவனங்களைச் சேர்ந்த விமான சிப்பந்திகளை அவுஸ்திரேலியாவில் இயங்கி வந்த ஒரு போதைப்பொருள் கடத்தல் கும்பல் பயன்படுத்திக் கொண்டதாகக் குறிப்பிடப்பட்டுள்ளது.

இந்தக் கடத்தல் கும்பல் ஒரு பெண்ணின் தலை மையில் செயற்பட்டுள்ளது. மெல்பேர்ன் நகரில் இருந்தபடி கடத்தல் வலைப்பின்னல் அமைத்துச் செயற்பட்ட அந்தப் பெண்ணின் பெயர் மிஷெல் என்காக் டிரான்.

விமானிகளும், விமானப் பணியாளர்களும், கடத்தி வரும் ஒவ்வொரு கிலோ ஹெரோயினுக்கு 1.55 இலட்சம் அவுஸ்திரேலிய டொலர்களை விலையாகக் கொடுத்துள்ளார்.

மறுபக்கம் அதே ஹெரோயினுக்கு கூடுதலாக 40 ஆயிரம் அவுஸ்திரேலிய டொரலர்களைக் கட்டணமாக வைத்து உள்ளூர் சந்தையில் விற்றுள்ளார். இடைத்தரகர்கள் மற்றும் கூரியர் செலவுகளுக்கு இந்த லாபத்திலிருந்து பணம் கொடுத்துள்ளார்.

49 வயது டிரான், போதைப்பொருள் வட்டாரங்களில் 'ரிச்மான்ட் அரசி" என்று குறிப்பிடப்படுவார் என்றும், கடந்த 2018 ஆம் ஆண்டு ஒக்டோபரில் தொடங்கி 2019 ஆம் ஆண்டு ஜனவரி வரையிலான காலகட்டத்தில் சுமார் 8 கிலோ கிராம் போதைப்பொருளை அவர் அவுஸ்திரேலியாவுக்குள் கடத்தி வரச் செய்தார் என்றும் உள்ளூர் நீதிமன்றத்தில் அவுஸ்திரேலிய அரசு தரப்பு தாக்கல் செய்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள் ளதாக பிரிஸ்பேன் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

கடந்த ஆண்டு ஆரம்பத்தில் மலேசியப் பெண் விமானப் பணியாளர் ஒருவர் மலேசியாவிலிருந்து அவுஸ்திரேலியாவுக்குப் போதைப்பொருள் கடத்த முயன்று மெல்பேர்ன் விமான நிலையத்தில் சிக்கினார்.

அதன் பிறகு நடைபெற்ற விசாரணையின் போதே விமானப் பணியாளர்களைக் கடத்தல் கும்பல் தங்களுடைய ஊழியர்களைப் போல் பயிற்சியளித்து, சன்மானம் கொடுத்து மிஷெல் டிரான் உத்தரவுப்படி போதைப் பொருள் கடத்தலுக்குப் பயன்படுத்தியது தெரியவந்துள்ளது.

மலேசியாவிலிருந்து அவுஸ்திரேலியாவுக்கு போதைப்பொருள் கடத்தப்படுவது அண்மைய ஆண்டுகளில் வழக்கமான நிகழ்வாகவே மாறிவிட்டது. போதைப்பொருள் கடத்தலுக்கு மலேசியாவில் அதிகபட்சமாக தூக்குத் தண்டனை விதிக்கப்படுகிறது.

ஆனால், அவுஸ்திரேலியாவில் ஆயுள்சிறை தான் அதிகபட்சம். ஒவ்வோர் ஆண்டும் போதைப் பொருள் கடத்தல் வழக்கில் மலேசியர்கள் தொடர்ந்து சிக்கி வருகின்றனர்.

கடந்த 2018 ஆம் ஆண்டின் ஆரம்பத்திலும் கூட மலேசிய விமானப் பணியாளர் ஒருவர் அவுஸ்திரேலியாவில் கைதானார்.

தற்போது அந்தப் பணியாளர் மூன்றரை வருட சிறைத் தண்டனையை அனுபவித்து வருகிறார்.

ஆனால், அவருக்கு போதைப்பொருள் கடத்தல் கும்பல் குறித்து அதிக விபரங்கள் தெரிந்திருக்க வில்லை. மேலும், வெறும் 500 அவுஸ்திரேலிய டொலர்களுக்கு மட்டுமே 3.5 கிலோ ஹெரோயினைக் கடத்த ஒப்புக் கொண்டுள்ளார் என்பது விசாரணையின் போது தெரியவந்தது. இதுதவிர, தாம் ஹெரோயின் கடத்துவதை அறிந்திருக்கவில்லை என்றும் அவர் தெரிவித்தார்.

எனவேதான் அவருக்கு குறைந்தபட்ச தண்டனை விதிப்பதாக அவுஸ்திரேலிய நீதிமன்றம் தீர்ப்பளித்தது.

ஆனால், மிஷெல் டிரான் மலேசிய விமானப் பணியாளர்களுக்கு என்ன கடத்துகிறோம், எப்படி கடத்தப் போகிறோம், என்ன இலாபம் கிடைக்கும் என்பதை எல்லாம் விளக்கமாக சொல்லிக் கொடுத்து கடத்தலை அரங்கேற்றியுள்ளதாக பிரிஸ்பேன் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

தனது கடத்தல் வலைப்பின்னலில் இடம்பெற்றவர்களுக்கு குறிப்பாக, மலேசிய விமானப் பணியாளர்களுக்கு மிஷெல் டிரான் பயிற்சியளித்துள்ளார்.

"நம்பிக்கையுடன் தைரியமாக நடைபோடுங்கள்" என்பதுதான் பயிற்சியின் தாரக மந்திரமாக இருந்துள்ளது. ஒரு கிலோ ஹெரோயின் அடங்கிய பொதியை விமானிகள் தங்களது இரு கால்களுக்கு இடையே கட்டிக்கொள்ள வேண்டும். பெண் ஊழியர்கள் தங்களது உள்ளாடைகளில் மறைத்து வைத்து கடத்திவர பயிற்சியளிக்கப்பட்டுள்ளதாக பிரிஸ்பேன் டைம்ஸ் கூறியுள்ளது.

சுமார் மூன்று மாத காலம் விமானப் பணியா ளர்கள் இவ்வாறு பயிற்சி பெற்றுள்ளனர். பயிற்சியின்போது சிறிய தலையணையை விமானிகள் தங்கள் கால்களுக்கு இடையே வைத்துக்கொண்டு நடை பழகியுள்ளனர். அதன் பிறகே ஒரு கிலோ ஹெரோயினை வைத்து நடை பயின்று பின்னர் கடத்தலைத் தொடங்கியுள்ளனர்.

கடந்த 30 ஆண்டுகளாக டிரான், போதைப் பொருள் கடத்தலில் ஈடுபட்டு வந்ததாகவும், அந்த வகையில் நிழல் உலகில் அவர் பிரபலமாக இருந்ததாகவும் பிரிஸ்பேன் டைம்ஸ் தெரிவித்துள்ளது.

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



செய்திகள் |

# தமிழ்த் தேசியம் பேசி தலைமுறையை குழிதோண்டிப் புதைத்த தமிழ்க்கட்சிகள்



## இராஜாங்க அமைச்சர் வியாழேந்திரன் காட்டம்

கொழும்பு,செப்.13

**தமிழ் மக்கள் உரிமையையும், அபிவிருத்தியையும் விரும்புகிறார்கள். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கு வாக்களிக்கவில்லை என்பதற்காக, மக்கள் உரிமை சார்ந்த விடயத்தில் தமது நிலைப்பாட்டை மாற்றிவிட்டார்கள் என்பது தவறானது என இராஜாங்க அமைச்சர் ச.வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.**

கொழும்பு,தனியார் வானொலியொன்றுக்கு வழங்கிய பேட்டியிலேயே அவர் இதனைத் தெரிவித்தார்

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கடந்த 10 வருடங்களில் தமிழ் மக்களின் உரிமை சார்ந்தோ, அபிவிருத்தி சார்ந்தோ எந்த முன்னேற்றத்தையும் கூட்டமைப்பு காணவில்லை. இ து நாடாளுமன்ற தேர்தலில் ஏற்பட்ட பின்னடைவல்ல. இது உள்ளூராட்சி தேர்தலிலேயே எற்பட்டது.

நல்லாட்சி அரசிற்கு முண்டு கொடுத்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழ் மக்களின் அடிப்படைத் தேவைகள் எதையும் பூர்த்தி செய்யவில்லை. 72 வருடங்களாக தமிழ்த் தேசியம் பேசிய கட்சிகள் தலைமுறைகளை குழி தோண்டிப் புதைத்து விட்டன. ஆனால், அவர்களின் தலைமுறைகள் நன்றாக வாழ்கிறார்கள்.

தமிழ் மக்கள் அரசியல், அபிவிருத்தி இரண்டையும் எதிர்பார்க்கிறார்கள். ஆனால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டிற்கும் உரிய கட்சியல்ல. அதனால்தான் கடந்த தேர்தல்களில் மக்கள் கூட்டமைப்பிற்கு வாக்களிக்கவில்லை. அவர்கள் உரிமையையும், அரசியலையும் தொடர்ந்து வலியுறுத்தி வருகிறார்கள்.

ஈழம், சுயாட்சி என்று பேசிக்கொண்டிருக்கிறார்கள். அவர்கள் பேசிக் கொண்டிருக்கட்டும். அவை வந்தால் நல்லது. ஆனால், அதற்கு முன்னர் மக்களின் அவசிய தேவைகள் பூர்த்தி செய்யப்பட வேண்டுமே.

இவை பேசிக்கொண்டிருக்க நன்றாக இருக்கும். விஜயகாந்தின் அதிரடிச் சண்டைக் காட்சிகளைப் பார்க்க நன்றாக இருக்கும். ஆனால், யதார்த்தம் அதுவல்லவே.

வடக்கு மக்களின் பிரச்னைகள் வேறு, கிழக்கு மக்களின் பிரச்னைகள் வேறு. மலையகத் தமிழர்களின் பிரச்னைகள் வேறு. ஆனால் தமிழ்த் தலைவர்கள் அனைத்துப் பிரச்னையையும் ஒன்றாகப் பார்க்கிறார்கள். வடக்குப் பிரச்னை வடக்கிலும், கிழக்கு பிரச்னை கிழக்கிலும் தீர்க்கப்பட வேண்டும். அப்படியென்றால்தான் அந்த மக்களின் இருப்பு பாதுகாக்கப்படும்.

வடக்கு - கிழக்கு இணைப்பு, சுயாட்சி, தன்னாட்சி எல்லாம் நல்லது. ஆனால், அந்தந்தப் பகுதி மக்களின் இருப்பு முதலில் பாதுகாக்கப்பட வேண்டும் -என்றார்.



# ஐம்பதிற்கும் மேற்பட்டோர் நேற்று நாடு திரும்பினர்

கொழும்பு,செப்.13

சிறப்பு விமானங்கள் மூலம் நேற்றுக்காலை ஐம்பதிற்கும் மேற்பட்ட பயணிகள் நாடு திரும்பியுள்ளனர் என கொரோனாத் தடுப்புக்கான தேசிய கட்டுப்பாட்டு மையம் தெரிவித்துள்ளது.

அந்தவகையில், கட்டார் மற்றும் டோஹாவில் சிக்கித் தவித்த 54 பேரும் டுபாயிலிருந்து நான்கு பேரும் அபுதாபியிலிருந்து ஒருவரும் நாடு திரும்பியதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

குறித்த 59 பயணிகளும் இராணுவத்தினரால் பராமரிக்கப்பட்டுவரும் தனிமைப்படுத்தல் நிலையங்களில் கட்டாய தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

நாடு முழுவதும் 67 தனிமைப்படுத்தல் மையங்களில் மொத்தம் 6,167 பேர் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். அதேவேளை, 38 ஆயிரத்து 863 பேர் தனிமைப்படுத்தல் காலத்தை முடித்துள்ளனர்.

இதற்கிடையில், சுகாதார அமைச்சால் நேற்று முன்தினம் 1890 பி.சி.ஆர். சோதனைகள் நடத்தப்பட்டுள்ளன. இலங்கையில் இதுவரை 2 இலட்சத்து 49 ஆயிரத்து 328 பி.சி.ஆர். பரிசோதனைகள் நடத்தப்பட்டுள்ளன.

நேற்று முன்தினம் நடத்தப்பட்ட சோதனைகளைத் தொடர்ந்து, இலங்கையில் நேற்று முன்தினம் நள்ளிரவு நிலவரப்படி மேலும் 14 புதிய நோயாளிகள் அடையாளம் காணப்பட்டனர்.

அவ்வாறு கண்டறியப்பட்ட நோயாளிகளில் 07 பேர் ஐக்கிய அரபு இராச்சியத்திலிருந்தும் 05 பேர் மாலைதீவிலிருந்தும் 02 பேர் சவுதி அரேபியாவில் இருந்தும் நாடு திரும்பியவர்கள் என சுகாதார அமைச்சு அறிவித்துள்ளது.

இலங்கையில் இதுவரை கண்டறியப்பட்ட கொரோனா வைரஸ் தொற்று உறுதியான நோயாளிகளின் எண்ணிக்கை 3,169 ஆக உள்ளது. அதில் 188 பேர் மருத்துவ கண்காணிப்பிலும் 2,969 பேர் குணமடைந்துள்ள துடன் 12 இறப்புக்கள் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# சாரதி அனுமதிப்பத்திரம் வழங்குவதற்கு இரத்தப் பரிசோதனை தேவையில்லை!

## அமைச்சர் திலும் அமுனுகம தெரிவிப்பு



கொழும்பு,செப்.13

சாரதி அனுமதிப்பத்திரம் வழங்கப்படுவதற்கு எதிர்வரும் காலங்களில் எந்தவொரு காரணத்திற்காகவும் இரத்தப் பரிசோதனை முன்னெடுக்கப்படமாட்டாது என போக்குவரத்து சேவைகள் இராஜாங்க அமைச்சர் திலும் அமுனுகம தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

சாரதி அனுமதிப்பத்திரத்தைப் பெற்றுக்கொள்வதற்காகப் பிரதான கண் பரிசோதனையே மேற்கொள்ளப்படும்.

சகலருக்கும் எக்ஸ் ரே கதிர் பரிசோதனை மேற்கொள்ள வேண்டிய அவசியம் இல்லை.

அதற்குச் செலவிடும் பணத்தைச் சேமிக்க முடியும் என எதிர்பார்ப்பதாக அவர் தெரிவித்தார்.

அத்துடன், எதிர்வரும் காலங்களில் இரத்தப் பரிசோதனையில் நீரிழிவு நோய் மற்றும் உயர் இரத்த அழுத்தம் இருப்பது தெரியவந்தாலும், அதனால், சாரதி அனுமதிப்பத்திரம் வழங்க எந்த விதத் தடையும் இருக்காது எனத் தெரிவித்தார்.

இந்நிலையில், ஆட்டோக்களின் தேவையற்ற பாகங்கள் என்ன என்பதை எதிர்காலத்தில் வர்த்தமானியில் வெளியிடப்படும் -என்றும் தெரிவித்தார்.

# இலங்கைப் பணிப்பெண் குவைத்தில் படுகொலை

கொழும்பு,செப்.13

குவைத்தில் இலங்கைப் பணிப்பெண் ஒருவர் சித்திரவதை செய்து கொலை செய்யப்பட்டுள்ளார் என கல்ப் நியூஸ் செய்தி வெளியிட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் குவைத்தைச் சேர்ந்த தம்பதியினரை பொலிஸார் விசாரணை செய்துவருகின்றனர்.

எரிகாயங்கள் உட்பட பல காயங்களுடன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் இலங்கைப் பணிப்பெண் உயிரிழந்தார்.

இலங்கையைச் சேர்ந்த பணிப்பெண்ணிற்கு தொழில் வாய்ப்பை வழங்கியவர்களே அவரை மருத்துவமனையில் அனுமதித்தனர். அவர்களை விசாரணை செய்துவருகின்றோம் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

தீவிர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்ட இலங்கைப் பணிப்பெண் உயிரிழந்தார் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.

முழுமையான அறிக்கையை பெறுவதற்காகவும் என்ன நடந்தது? என்பதை உறுதி செய்வதற்காகவும் உயிரிழந்த பணிப் பெண்ணின் உடலை தடயவியல் பிரிவிற்கு அனுப்பியுள்ளோம் என பொலிஸார் தெரிவித்தனர்.

# வடக்கு இளைஞர், யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்குங்கள்

## இராணுவக் கட்டளைத் தளபதியிடம் நல்லை ஆதீன முதல்வர் கோரிக்கை

யாழ்ப்பாணம்,செப்.13

வடக்கில் வேலையில்லாப் பிரச்னை ஒரு பெரும் பிரச்னையாகக் காணப்படுவதால் அதனை இந்த அரசின் மூலம் தீர்ப்பதற்கு முன்வர வேண்டும் என நல்லை ஆதீனக் குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஞான சம்பந்த பரமாச்சாரிய சுவாமிகள், யாழ். மாவட்ட இராணுவக் கட்டளைத் தளபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

யாழ்.மாவட்டத்தின் புதிய கட்டளைத் தளபதியாகப் பொறுப்பேற்றுக் கொண்ட மேஜர் ஜெனரல் செனரத் பண்டார நேற்று, நல்லை ஆதீன முதல்வரைச் சந்தித்துக் கலந்துரையாடியதுடன் ஆசீர்வாதமும் பெற்றுக்கொண்டார்.

யாழ்ப்பாணத்துக்குப் புதிதாக பதவியேற்றுள்ள கட்டளைத் தளபதி மேஜர் ஜெனரல் செனரத் பண்டார பல தரப்பினரையும் சந்தித்துக் கலந்துரையாடிவரும் நிலையில் நல்லை ஆதீனக் குருமுதல்வரையும் சந்தித்து ஆசி பெற்றார்.

இந்தக் கலந்துரையாடலில் யாழ்.மாவட்டத்தின் நிலைமைகள் தொடர்பில் கலந்துரையாடியதோடு, நல்லூர்க் கந்தன் ஆலயத்துக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்டார்.



# 22ஆம் திகதி சபையில் ‘20’

## அரச உயர் மட்டத்தில் இருந்து தகவல்

கொழும்பு, செப்.13

**20ஆவது திருத்தச் சட்டவரைவு எதிர்வரும் 22ஆம் திகதி பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது.**

அரசமைப்பின் 19 ஆவது திருத்தச் சட்டத்தை இல்லா தொழித்து, நிறைவேற்று அதிகார ஜனாதிபதியிடம் அதிகாரங்களைக் குவிக்கும் விதத்திலான 20ஆவது திருத்தச் சட்டவரைவு வர்த்தமானியில் வெளியிடப்பட்டுள்ளது.

இந்நிலையில், 20ஆவது திருத்தத்தில் உள்ள சில சரத்துகளுக்கு எதிர்ப்புகள் வலுத்துள்ளன. குறிப்பாக, இரட்டைக் குடியுரிமை தொடர்பில் ஆளுங்கட்சிக்குச் சார்பான அமைப்புகள்கூட விசனம் வெளியிட்டுள்ளன. இவ்வாறான விடயங்களை பாராளுமன்றத்தில் குழுநிலை விவாதத்தின்போது அரசு திருத்தக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

செப்ரெம்பர் மாதத்துக்கான இரண்டாவது நாடாளுமன்றக் கூட்டத்தொடர் எதிர்வரும் 22ஆம் திகதி ஆரம்பமாகின்றது. அன்றைய தினமே நீதி அமைச்சரால் முதலாம் வாசிப்புக்கென ’20’ சபையில் சமர்ப்பிக்கப்படவுள்ளது.

# பாதுகாப்புச் செயலருடன் அமெரிக்க தூதுவர் பேச்சு



கொழும்பு, செப் 13

எம்.டி நியூ டயமண்ட் எண்ணெய் கப்பலில் ஏற்பட்ட தீயை கட்டுப்படுத்துவதற்கு இலங்கைக் கடற்படையினரும் விமானப்படையினரும் மேற்கொண்ட நடவடிக்கைகளை அமெரிக்கத் தூதுவர் பாராட்டியுள்ளார் என்று பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

நேற்று முன்தினம் அமெரிக்கத் தூதுவர் அலைனா ரெப்ளிட்ஸ் - பாதுகாப்புச் செயலாளர் கமால் குணரட்ணவைச் சந்தித்து பேச்சுக்களை மேற்கொண்டார். இதன்போதே அவர் இவ்வாறு கூறினார்.

இந்தச் சந்திப்பின்போது இலங்கையும் அமெரிக்காவும் எல்லை கடந்த குற்றங்களைத் தடுப்பது உட்பட பாதுகாப்பு விடயங்கள் தொடர்பில் பேசப்பட்டன.

இதேவேளை, எல்லை கடந்த குற்றங்கள், போதைப்பொருள் கடத்தல், ஆள்கடத்தல் போன்றவை குறித்தும் அவற்றை கட்டுப்படுத்துவது மற்றும் அவற்றைத் தடுப்பதற்கான பயிற்சிகள் குறித்தும் பேச்சுகள் இடம்பெற்றதாக பாதுகாப்பு அமைச்சு தெரிவித்துள்ளது.

# வரி நீக்கத்தின் பின்னரும் விலை குறையாத தங்கம்

## தங்க நகை வர்த்தகர் சங்கம் கவலை

கொழும்பு, செப் 13

இலங்கையில் தங்க இறக்கு மதிக்கு விதிக்கப்பட்ட 15 சத வீத வரி ரத்து செய்யப்பட்டுள்ள நிலையில், அதன் நன்மைகளை நுகர்வோருக்கு தற்போதைய சூழ்நிலையில் வழங்க இயல வில்லை என்று அகில இலங்கை தங்க நகை வர்த்தகர் சங்கம் தெரிவித்துள்ளது.

பிபிசி தமிழுக்கு வழங்கிய பிரத்தியேக பேட்டியில், அகில இலங்கை தங்க நகை வர்த்தக சங்கத்தின் பொருளாளர் இரா. பாலசுப்ரமணியம் இதனைக் குறிப்பிட்டார்.

உலக சந்தையில் தங்கத்தின் விலையேற்றம் மற்றும் அரசு வெளியிட்ட அறிவிப்பு தொடர்பிலான முறையான திட்டம் இல்லாது உள்ளிட்ட சில காரணங்களால் தங்கத்தின் விலையை தற்போதைக்கு குறைக்க முடியாதுள்ளதாக அவர் கூறினார்.

எனினும், எதிர்வரும் ஓரிரு மாதங்களுள் ஓரளவேனும் தங்கத்தின் விலையை குறைப்பதற்கான சாத்தியம் காணப்படுவதாக அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

இதேவேளை, தெற்காசியா விலேயே தங்கத்தின் விலை குறைவாக காணப்படுகிற நாடு இலங்கை என அவர் குறிப்பிட்டார்.

அரசு வெளியிட்ட அறிவிப்பு நடைமுறைப்படுத்தப் படும் பட்சத்தில், தெற்காசியா வில் தங்கத்தின் விலை மிகவும் குறைந்த நாடாக இலங்கை காணப்படும் என இரா.பால சுப்ரமணியம் தெரிவித்தார்.

இலங்கைத் தங்க நகை செய்பவர்களால் தயாரிக்கப் படும் தங்க ஆபரணங்களுக்கு சர்வதேச சந்தையில் பாரிய கேள்வி காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

அரசால் ரத்து செய்யப்பட்டுள்ள 15 சதவீத தங்க இறக்கு மதி வரியினால், தங்கத்தின் விலையை உடனடியாக குறைக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளதாகக் கொழும்பு பல்கலைக்கழகத்தின் பொருளியல்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.கணேஷமூர்த்தி தெரிவிக்கின்றார்.

பிபிசி தமிழுக்கு வழங்கிய பிரத்யேக செவ்வியில் அவர் இதனைக் குறிப்பிட்டார்.

அதுமட்டுமின்றி, தங்கத்தின் விலை சர்வதேச சந்தையில் எதிர்வரும் மாதங்களில் படிப் படியாக குறையவேண்டிய நிலை காணப்படுவதாகவும் அவர் கூறினார்.

இலங்கை அரசு வர்த்தகர் களை நோக்காகக் கொண்டு இந்த நடவடிக்கையை மேற் கொண்டபோதிலும், நுகர் வோர் மத்தியில் ஓர் எதிர் பார்ப்பு ஏற்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இதனால், தங்க வர்த்தகர் களின் விற்பனை பாதிக்கப்படும் சாத்தியம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் கூறுகிறார்.

இவ்வாறு தங்க வர்த்தகர்களுக்கு ஏற்படும் விற்பனை பாதிப்பானது, தற்காலிகமான ஒன்று எனவும் விரிவுரையாளர் கணேஷமூர்த்தி தெரிவிக்கின்றார்.

# ஆயுர்வேத மத்திய மருந்தகத்தை மீளத் திறந்து சேவை வழங்குங்கள்

## நவாலி மக்கள் கோரிக்கை

யாழ்ப்பாணம், செப் 13

நவாலி தெற்குப் பகுதியில் இயங்கிய ஆயுர்வேத மத்திய மருந்தகத்தை மீளத் திறந்து மக்கள் சேவைக்கு அனுமதிக்க வடக்கு மாகாண சுதேச வைத்திய ஆணையாளர் முன்வர வேண்டும் என வலி.தென் மேற்கு, நவாலி மக்கள் கூட்டாக கோரிக்கை விடுத்துள்ளனர்.

நவாலி தெற்கில் உள்ள ஹேமலதா ஞாபகார்த்த கட்டடத்தில் இந்த ஆயுர்வேத மத்திய மருந்தகம் கடந்த மூன்று வருடங்களாக இயங்கி வந்தது.

பின்னர் கட்டடத்தின் நிலம் மீள்புனரமைப்புக்காக தற்காலிகமாக மருந்தகச் செயற்பாட்டை இடைநிறுத்துவதாக ஆணையாளரினால் அறிவிக்கப்பட்டது.

தற்போது கட்டடத்தின் நிலம் புனரமைப்பு செய்யப்பட்டு அதன் தன்மை தொடர்பில் ஆணையாளருக்கு மீள அறிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, கடந்த காலத்தில் வாரத்தில் திங்கள், வியாழன் ஆகிய இரு தினங்கள் வழங்கிய மருத்துவ சேவையை மீள வழங்கி உதவுமாறு கோரப்பட்டுள்ளது.

கடந்த மூன்று வருட காலத்தில் மட்டும் 3420இற்கும் மேற்பட்டோர்இங்கு சிறந்த மருத்துவ சேவையைப் பெற்று நன்மை யடைந்துள்ளனர் என புள்ளி விவரம் மூலம் தெரியவந்துள்ளது.

# ரி-56 ரக துப்பாக்கி வைத்திருப்போர் பற்றி தகவல் தருபவருக்கு 250,000 சன்மானம்!

**பொதுமக்களுக்கு பொலிஸார் அறிவிப்பு**

கொழும்பு,செப்.12

ரி - 56 ரக துப்பாக்கியுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டால் தகவலை வழங்கியவருக்கும் கைதுசெய்த பொலிஸாருக்கும் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் சன்மானம் வழங்கப்படும் - என பொலிஸ் தலைமையகம் அறிவித்துள்ளது.

சட்டவிரோத துப்பாக்கிகள் மற்றும் கைக்குண்டுகளுடன் சந்தேக நபர்களைக் கைது செய்யும் பொலிஸாருக்கும் இவை குறித்து தகவல்களை வழங்கும் பொது மக்களுக்கும் வழங்கும் சன்மானத் தொகையை அதிகரிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக, பொலிஸ் தலைமையகத்தால் அறிக்கையொன்று வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த அறிக்கையில், “ரி-56 ரக துப்பாக்கியுடன் சந்தேக நபரொருவர் கைது செய்யப்பட்டால் தகவலை வழங்கியவருக்கும் கைதுசெய்த பொலிஸாருக்கும் இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பணம் வழங்கப்படும். ரி-56 ரக துப்பாக்கி கைப்பற்றப்பட்டால் பொலிஸ் உத்தியோகத்தருக்கு இரண்டு இலட்சம் ரூபாயும் தகவலை வழங்கியவருக்கு இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும்.

ரி- பீட்டர் ரக துப்பாக்கியுடன் ஒருவர் கைது செய்யப்பட்டால் பொலிஸ் உத்தியோகத்தருக்கும் தகவல் வழங்கியவருக்கும் 50 ஆயிரம் ரூபாயும் துப்பாக்கி மாத்திரம் கைப்பற்றப்பட்டால் இருவருக்கும் 25 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படும்.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைத்துப்பாக்கியுடன் சந்தேகநபரைக் கைதுசெய்யும் பொலிஸாருக்கு 25 ஆயிரம் ரூபாயும் தகவல் வழங்குபவருக்கு 15 ஆயிரம் ரூபாய் பணமும் வழங்கப்படும். அத்துடன், துப்பாக்கி மாத்திரம் கைப்பற்றப்பட்டால் இருவருக்கும் தலா 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

கைத் துப்பாக்கியுடன் சந்தேகநபரைக் கைதுசெய்யும் பொலிஸ் உத்தியோகத்தருக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாய் பணமும் தகவல் வழங்குபவருக்கு இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் பணம் வழங்கப்படும்.

துப்பாக்கி மாத்திரம் கைப்பற்றப்படும் போது பொலிஸ் உத்தியோகத்தருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் தகவலை வழங்கியவருக்கு இரண்டு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் வழங்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட தன்னியக்க துப்பாக்கியுடன் சந்தேகநபரை கைதுசெய்யும் பொலிஸ் உத்தியோகத்தருக்கு ஒரு இலட்சத்து 50 ஆயிரம் ரூபாயும் தகவல் வழங்குபவருக்கு இரண்டு இலட்சம் ரூபாயும் வழங்கப்படும். துப்பாக்கி மாத்திரம் கைப்பற்றப்பட்டால் பொலிஸ் உத்தியோகத்தருக்கு ஒரு இலட்சம் ரூபாயும் தகவல் வழங்குபவருக்கு இரண்டு இலட்சம் ரூபாயும் வழங்கப்படவுள்ளது.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட வேறு வகையான துப்பாக்கியுடன் சந்தேகநபரை கைதுசெய்யும் பொலிஸ் உத்தியோகத்தருக்கும் தகவலை வழங்குபவருக்கும் தலா 50 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். துப்பாக்கி மாத்திரம் கைப்பற்றப்பட்டால் இருவருக்குமே 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

உள்நாட்டுத் துப்பாக்கியுடன் சந்தேக நபரொருவரைக் கைது செய்யும் பொலிஸ் உத்தியோகத்தருக்கு 15 ஆயிரம் ரூபாயும் தகவல் வழங்கியவருக்கு 10 ஆயிரம் ரூபாயும் வழங்கப்படுவதுடன் துப்பாக்கி மாத்திரம் கைப்பற்றப்பட்டால் பொலிஸ் உத்தியோகத்தருக்கும் தகவல் வழங்கியவருக்கும் 10 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும்.

வெளிநாட்டில் தயாரிக்கப்பட்ட கைக்குண்டுடன் சந்தேக நபரைக் கைது செய்யும் பொலிஸாருக்கும் தகவல் வழங்குபவருக்கும் தலா 25 ஆயிரம் ரூபாய் வழங்கப்படும். கைக்குண்டு மாத்திரம் கைப்பற்றப்படும் போது இருவருக்கும் 15 ஆயிரம் ரூபாய் பணம் வழங்கப்படும்” எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செய்திகள்

## லிந்துலையில் குழு மோதல்; அறுவர் கைது!

கொழும்பு, செப் 13

லிந்துலை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பம்பரகலை ஒடின்டன் தோட்டத்தில் நேற்று முன்தினம் இரவு இரு குடும்பங்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் இருவர் காயமடைந்துள்ளனர்.

அத்துடன், மோட்டார் சைக்கிளொன்றும் தீயிட்டுக் கொளுத்தப்பட்டுள்ளது.



மோதல் சம்பவம் தொடர்பில் லிந்துலை பொலிஸாரால் அறுவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதானவர்கள் நுவரெலியா நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப் படவுள்ளனர். மேலதிக விசாரணைகளை லிந்துலை பொலிஸார் மேற்கொள்கின்றனர்.

## மேலும் 14 பேர் பூரண குணம்

கொழும்பு, செப் 13

கொரோனா வைரஸ் தாக்கத்தில் இருந்து மேலும் 14 பேர் பூரணமாக குணமடைந்து வீடு சென்றுள்ளனர் என சுகாதார அமைச்சு நேற்று தெரிவித்தது.

அதன்படி, இதுவரை கொரோனா தொற்றுக்குள்ளாகி பூரணமாக குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை 2 ஆயிரத்து 983 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் தொற்று உறுதியானவர்களில் 174 பேர் தொடர்ந்தும் வைத்தியசாலைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

அத்தோடு, கொரோனா தொற்று சந்தேகத்தில் 39 பேர் தொடர்ந்தும் வைத்திய கண்காணிப்பில் வைக்கப்பட்டுள்ளனர் எனச் சுகாதார அமைச்சின் தொற்றுநோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இலங்கையில் இதுவரை 3 ஆயிரத்து 169 பேர் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளாகியுள்ள நிலையில் 12 பேர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



## சிங்கராஜ வன எல்லைகளில் தேயிலை செய்கை வேண்டாம்

### அமைச்சர் வாசுதேவ கோரிக்கை

கொழும்பு, செப் 13

சிங்கராஜ வனாந்தர எல்லைகளில் தேயிலைச் செய்கை மற்றும் காடழிப்புக்களில் ஈடுபட வேண்டாம் என்று பெருந்தோட்ட நிர்வாகங்களுக்கு நீர்வளத்துறை அமைச்சர் வாசுதேவ நாணயக்கார எச்சரிக்கை விடுத்துள்ளார்.

சிங்கராஜ எல்லைக் கிராமங்களில் இடம்பெற்ற மரம் நாட்டும் வைபவத்தில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் உரையாற்றுகையில்-

வெளிநாட்டவர்கள் ஆதிக்க காலத்தில் நாட்டில் இருந்த இலட்சக்கணக்கான மரங்கள் வெட்டப்பட்டு நாசமாக்கப்பட்டன. இந்தப் பிரதேசத்தில் உள்ள காணிகளின் பிரதான உரிமை சிங்கராஜ வனத்திற்குரியதாகும்

1818 களில் இலங்கையை ஆண்ட வெளிநாட்டுச் சக்திகள் நாட்டிலுள்ள பல இலட்சம் மரங்களை வெட்டிச் சாய்த்தன. இவ்வாறு வெட்டியழிக்கப்பட்ட ஒவ்வொரு மரத்திற்கும் பதிலாக 10 மரங்களை நடுவதே எனது இலட்சியமாகும். நீர் நிலைகளை முகாமைத்துவம் செய்யும் பொறுப்பை நீர் விநியோகத் திணைக்களத்துக்கு வழங்குவது தொடர்பில் ஜனாதிபதியுடன் கலந்தாலோசிக்கவுள்ளேன்.

சிங்கராஜ வனத்தின் வளம் மிக்க பிரதேசங்களில் நீர் நிலைகள் வற்றிக் காணப்படுகின்றன. காடுகளை துப்புரவு செய்வதும் நீரை வெளியே எடுத்துச் செல்வதும் இந்நிலைமைக்கு காரணம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

நீரின் பெறுமதியை உணர்ந்து நாம் எமது பகுதிகளில் மிகுதியாக உள்ள மேலதிக நீரை கஷ்டப்படும் மக்களுக்கு முறையான விதத்தில் வழங்குவதற்கு கருணை காட்டவேண்டும்-என்றார்.

## இனவாதத்தை உருவாக்கி விக்கி அமைதியை குலைக்கக்கூடாது!

### ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை



கொழும்பு, செப்.13

**இனவாதம், மதவாதத்தை மக்களின் மனங்களில் உருவாக்கி அமைதியை இல்லாமல் செய்து விடக் கூடாது என தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான சி.வி.விக்னேஸ்வரனிடம் ஐக்கிய மக்கள் சக்தி கோரிக்கை விடுத்துள்ளது.**

ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் டயானா கமகே இந்தக் கோரிக்கையை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றத்தில் நேற்று முன் தினம் நடைபெற்ற அமரர் ஆறுமுகன் தொண்டமானின் அனுதாபப் பிரேரணை மீது பேசும்போது அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

வடக்கு, கிழக்குப் பிரச்னைகள் தொடர்பாக பாராளுமன்ற உறுப்பினர் விக்னேஸ்வரன் மிகவும் இனவாத , மத வாத பேதத்துடன் பேசுவதை கடந்த காலங்களில் அவதானித்தோம். அவருக்குக் கூற விரும்புவது என்னவென்றால், நீங்கள் எமக்கு இல்லாமல்போன ஆறுமுகன் தொண்டமானின் புத்தகத்தில் பக்கமொன்றை எடுங்கள். அவர் மக்களுக்குச் சேவை செய்வதற்காக ஜனநாயகத்தைத் தெரிவு செய்த சிறந்த நபராவார்.

வடக்கு மக்களுக்கு வவுனியா தொகுதி அமைப்பாளர் என்ற ரீதியில் இணைந்து பணியாற்றியுள்ளேன். வடக்கு-கிழக்குக்கும் நான் போரின் பின்னர் சென்றுள்ளேன்.

நீங்கள் ஒன்றை நினைவில் கொள்ளுங்கள். தமிழ் மக்களுக்குப் போர் மனநிலை அவசியமில்லை. இனவாதம், மதவாதம் அவசியமில்லை. இது ஒருமித்த நாடு. இலங்கையர் என்ற ரீதியில் இந்த நாட்டை முன்னோக்கிக் கொண்டு செல்லவேண்டும். இவ்வாறான நிலைப்பாட்டிலேயே ஆறுமுகன் தொண்டமான் செயற்பட்டார்.

இந்நிலையில் விக்னேஸ்வரனுக்குச் சொல்ல விரும்புவது, நீங்கள் இந்த இடத்துக்கு மக்களின் வாக்குகளைப் பெற்று வந்துள்ளமையானது அந்த மக்களுக்காக வேலை செய்வதற்கே ஆகும். அந்த மக்களின் பிரச்னைகளைத் தீர்ப்பதும், அவர்களின் மனங்களில் மகிழ்ச்சியையும் , நல்லிணக்கத்தையும் ஏற்படுத்துவதுமே உங்களின் கடமையாகும். அதனை விடுத்து இனவாதம், மத வாதத்தை அந்த மக்களின் மனங்களில் உருவாக்கி, பெற்றுள்ள அமைதியை இல்லாமல் செய்து விட வேண்டாம்-என்றார்.

## வனவிலங்கு பாதுகாப்புக்கு வருகின்றது புதிய சட்டம்

கொழும்பு, செப் 13

வனவிலங்குகளின் பாதுகாப்பு தொடர்பான கடுமையான சட்டங்கள் அடங்கிய புதிய வரைவு இரண்டு,மூன்று வாரங்களில் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என்று வனவிலங்கு மற்றும் வன பாதுகாப்பு அமைச்சர் சி.பி.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

மஸ்கெலியாவில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கருத்து தெரிவித்த அவர், இந்தப் புதிய வரைவு உடனடியாக அமைச்சரவையில் தாக்கல் செய்யப்படும் எனக் கூறினார்.

விலங்குகளைச் சட்டவிரோதமாக வேட்டையாடினால் 100,000 ரூபா அபராதம் மற்றும் ஒரு வருடம் சிறைத் தண்டனை விதிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டார்.

அத்தோடு காடுகளுக்கு தீ வைப்போர் ஐந்து ஆண்டு சிறைத் தண்டனையை அனுபவிப்பார்கள் என்றும் அமைச்சர் கூறினார்.

வனவிலங்கு மற்றும் வன பாதுகாப்பு தொடர்பான சட்டங்கள் கண்டிப்பாக அமுல்படுத்தப்படவேண்டும் என தெரிவித்த அமைச்சர், மிருகக்காட்சிச்சாலைகளிலும் சதுப்பு நிலங்களிலும் கடல் வாழ் உயிரினங்களைப் பாதுகாப்பதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தினார்.



## சர்வாதிகார ஆட்சி நோக்கி நகரவில்லை கோட்டா அரசு

### பிரசன்ன ரணவீர சொல்கிறார்

கொழும்பு, செப் 13

இந்த அரசு சர்வாதிகார ஆட்சியை நோக்கி நகரவில்லை எனக் கிராமிய கைத்தொழில் மேம்பாடு இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்த அவர், 1978 ஆம் ஆண்டு ஜே.ஆர்.ஜெயவர்த்தன அறிமுகப்படுத்திய அரசமைப்பில்தான் ஆட்சியமைக்க நடவடிக்கை எடுத்துள்ளது.

பிரேமதாஸ, டிங்கிரிபண்டா, சந்திரிகா குமாரதுங்க, மஹிந்த ராஜபக்ஷ என அனைத்து முன்னாள் ஜனாதிபதிகளும் இந்த முறைமையில் தான் ஆட்சி செய்தார்கள்.

எனவே, நாம் புதிய பயணமொன்றுக்குச் செல்ல முற்படவில்லை என்பதையும் பழைய முறையில் ஆட்சி செய்யவே முனைகிறோம் என்பதையும் புரிந்துக் கொள்ள வேண்டும்-என்றார்.

## அரசுக்கு ஆதரவளிக்கும் 10 எதிரணி எம்.பிக்கள்?

கொழும்பு, செப் 13

அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டவரைவுக்கு எதிரணியைச் சேர்ந்த 10 பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆதரவளிக்கவுள்ளனர் என சிங்கள வார இதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

இவர்கள் இரு குழுக்களாக பிரிந்து ஆளுங்கட்சிக்கு ஆதரவு வழங்கவுள்ளனர் என சிரேஷ்ட அமைச்சரொருவரை மேற்கோள்காட்டி அந்தச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது.

இதன்படி 20 வாக்கெடுப்புக்கு விடப்படும்போது ஒரு குழு ஆளுங்கட்சியுடன் இணையும் எனவும், மற்றைய தரப்பு எதிரணியில் இருந்தவாறே அரசின் திட்டங்களுக்கு ஆதரவு வழங்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

செய்திகள்



# இலங்கைக்கு கடத்தப்படவிருந்த 1500 கிலோ மஞ்சள் பறிமுதல்!

## தமிழக பொலிஸார் அதிரடி

சென்னை,செப்.13

இலங்கைக்குக் கடத்துவதற்காக வாகனத்தில் கொண்டு வரப்பட்ட சுமார் 1500 கிலோ மஞ்சளை மரைன் பொலிஸார் பறிமுதல் செய்ததுடன் சகோதரர்கள் இரண்டு பேர் உட்பட 3 பேரைக் கைது செய்து விசாரணை நடத்திவருகின்றனர்.

இலங்கையில் மஞ்சள் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து இலங்கைக்கு மஞ்சள் கடத்துவது அதிகரித்து வருகின்றது.

இந்நிலையில் ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலம் பகுதியில் இருந்து வாகனத்தில் இராமநாதபுரம் மாவட்டம் மண்டபத்தை அடுத்துள்ள வேதாளைப்பகுதிக்கு மஞ்சள் கடத்தி வருவதாக தமிழக மண்டபம் கடலோரக் காவல் குழு காவலர்களுக்கு தகவல் கிடைத்துள்ளது.

இதனையடுத்து, வேதாளைப்பகுதியில் சந்தேகத்திற்கிடமாக வந்த வாகனத்தை நிறுத்திச் சோதனை செய்தபோது மூடை மூடையாக மஞ்சள் இருப்பது தெரியவந்தது.

இதனையடுத்து வாகனத்தையும் அதிலிருந்த மஞ்சளையும் பொலிஸ் நிலையத்திற்குக் கொண்டு சென்றதுடன் வாகனத்தில் இருந்த மூன்று பேரிடமும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டனர்.

அப்போது வேதாளை பகுதியைச் சேர்ந்த சகிபுல்லா, ரியாஸ் ஆகியோர் சகோதரர்கள் என்றும் மேலும் சத்தியமங்கலம் புளியம்பட்டியைச் சேர்ந்த லோக வெங்கடேஷ் என்பவர் வாகனச் சாரதி என்பதும் தெரியவந்தவுடன் இவர்கள் மீது வழக்குப்பதிவு செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில், இலங்கையில் மஞ்சள் இறக்குமதிக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளதால் மஞ்சளுக்கு தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளதுடன் ஒரு கிலோ மஞ்சளின் விலை சுமார் 2000 முதல் 2800 ரூபாய் வரை விற்பனை செய்யப்படுகிறது. இதனால், தமிழக கடலோரப் பகுதிகளில் இருந்து மஞ்சள் கடல் வழியாக கடத்தப்படுவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்நிலையில் கடந்த வாரம் மன்னார் பகுதியில் சுமார் 2000 கிலோ மஞ்சளை இலங்கைக் கடற்படையினர் பறிமுதல் செய்த நிலையில் தற்பொழுது வேதாளை பகுதியில் இருந்து சுமார் 1500 கிலோ மஞ்சள் பறிமுதல் செய்யப்பட்டு இருப்பது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

# கஞ்சா மற்றும் ஹெரோயினுடன் வவுனியாவில் இருவர் சிக்கினர்!

வவுனியா,செப்.13



வவுனியா நகரிலிருந்து மாமடு நோக்கி கேரளக் கஞ்சா மற்றும் ஹெரோயினை கடத்திச் சென்றவர்களை மடுகந்தை பொலிஸார் நேற்றுக் கைது செய்துள்ளனர்.

மடுகந்தை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் வவுனியா - மாமடு செல்லும் சந்தியில் அமைக்கப்பட்டுள்ள பொலிஸ் சோதனைச்சாவடியில் மாமடு நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்றவர்களை வழிமறித்து சோதனை மேற்கொண்ட போது அவர்களிடமிருந்து 2 கிலோ கிராம் கேரளக் கஞ்சா மற்றும் 3 கிராம் 100 மில்லி கிராம் ஹெரோயின் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு கைது செய்யப்பட்ட இருவரும் பூந்தோட்டம், றம்பைக்குளம் பகுதியைச் சேர்ந்த 26,36 வயதுடையவர்கள் எனத் தெரிவிக்கப் படுகிறது.

குறித்த சந்தேகநபர்கள் இருவரும் பயணித்த மோட் டார் சைக்கிளையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

கைது செய்யப்பட்டவர் களை மேலதிக விசாரணைகளின் பின்னர் வவுனியாமாவட்ட நீதவான் நீதிமன் றத்தில் ஒப்படைக்கவுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்தனர்.

# ‘20’ நிறைவேற்றப்படுமானால் பிரதமர் ‘பியூனா’க மாறுவார்

## கலாநிதி ஜயம்பதி சுட்டிக்காட்டு



**கொழும்பு,செப்.13**

**20ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டால் பிரதமர் மீண்டும் பியூனாகவே மாறவேண்டியிருக்கும் என்று சுட்டிக்காட்டிய, முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஜனாதிபதி சட்டத்தரணி கலாநிதி ஜயம்பதி விக்கிரம ரத்ன, அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தம் மக்களிடம் அபிப்பிராயம் கோரப்படாமல் நிறைவேற்றப்பட்டமையால், மக்களிடம் அபிப்பிராயம் கோராமலேயே அதில் திருத்தங்களைச் செய்யமுடியும் என்று முன்வைக்கப்படுகின்ற தர்க்கம் நியாயமானதாகும் என்றும் கூறினார்.**

ஆனால், இறையாண்மையைப் பலப்படுத்துவதற்கு மக்களிடம் அனுமதி பெறத் தேவையில்லை. மாறாக அதனை வலுவிழக்கச்செய்வதெனின் நிச்சயமாக மக்களிடம் அனுமதி கோர வேண்டும். 19 ஆவது திருத்தம் மக்களின் இறையாண்மையை ஸ்திரமடையச்செய்தது. அந்த வெற்றியை 20 ஆவது திருத்தத்தின் ஊடாக மீண்டும் பின்நோக்கித் திருப்புவதாக இருந்தால் மக்கள் அபிப்பிராயம் கோரப்பட வேண்டியது இன்றியமையாததாகும் என்றும் தெரிவித்தார்.

இதுகுறித்து அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கையில்,

அரசியலமைப்பின் 20 ஆவது திருத்த யோசனை முன்மொழியப்பட்டிருக்கின்றது. அதுகுறித்து ஒரேயொரு வரியில் கூறவேண்டுமானால், அது 2010 - 2015 ஆம் ஆண்டு காலப்பகுதிக்கு நாட்டை மீண்டும் கொண்டுசெல்வதேயாகும். இந்த 20 ஆவது திருத்தம் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படுமானால் 19 ஆவது திருத்தத்தின் எஞ்சுபவை ஜனாதிபதியினதும் பாராளுமன்றத்தினதும் பதவிக்காலம் 5 வருடங்கள், ஜனாதிபதி பதவிக்கான வரையறை மற்றும் தகவல் அறியும் உரிமைச்சட்டம் ஆகியவை மாத்திரமேயாகும்.

ஜனநாயக ஆட்சிமுறை ஒன்றின் மீதும் மக்களின் இறையாண்மை மீதும் 20ஆவது திருத்தம் ஏற்படுத்தக்கூடிய தாக்கங்களை விளக்குவதுடன் அதுகுறித்து மக்கள் மத்தியில் விரிவான தர்க்கம் ஏற்படுவது அவசியம் என்பதை வலியுறுத்துவதே எனது நோக்கமாகும்.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தின் ஊடாக இலங்கையின் ஜனாதிபதிமுறை உலகிலேயே மிகவும் பலம் வாய்ந்ததும் மிகமோசமானதுமான ஒன்றாக மாறியது. இந்நிலையில் 19 ஆவது திருத்தத்தின் ஊடாகப் பெற்றுக்கொண்ட அடைவுகள், வெற்றிகள் அனைத்தையும் இல்லாமல் செய்து மீண்டும் பின்நோக்கிச் செல்வதையே 20 ஆவது திருத்த முன்மொழிவு இலக்காகக் கொண்டிருக்கின்றது.

அரசியலமைப்பின் 19 ஆவது திருத்தத்தில் பல்வேறு குறைபாடுகள் காணப்படுகின்றன. அவற்றில் ஒன்று நிறைவேற்றதிகாரமுடைய ஜனாதிபதி முறையை முற்றாக ஒழிக்காமல் இருப்பதற்கு நல்லாட்சி அரசாங்கம் தீர்மானித்தமையாகும்.

அதேபோன்று பாராளுமன்றத்தில் மூன்றில் இரண்டு பெரும்பான்மையைப் பெற்றுக்கொள்வதற்கான எதிர்க்கட்சியால் முன்வைக்கப்பட்ட யோசனைகளை அரசாங்கம் ஏற்றுக்கொண்டமையும் குறைபாடுகள் ஏற்படுவதற்குக் காரணமாக அமைந்தன.

எனினும் 19 ஆவது திருத்தத்தின் மூலம் பாராளுமன்றத்தின் நம்பிக்கையைப் பெற்ற பிரதமருக்கு அதிகளவான அதிகாரங்கள் கிடைத்தன. ஆனால், 20 ஆவது திருத்தம் நிறைவேற்றப்பட்டால் பிரதமர் மீண்டும் பியூனாகவே மாறவேண்டியிருக்கும். பிரதமரை எப்போது வேண்டு மானாலும் நீக்கமுடியும். அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்களை ஜனாதிபதி நியமிக்கும் போதும் நீக்கும் போதும் பிரதமரிடம் அபிப்பிராயம் கோரவேண்டிய அவசியமில்லை என அவர் தெரிவித்தார்.

# மூன்று ரஷ்ய பல்கலைக்கழகங்களில் மருத்துவ கற்கை நிறுத்தப்பட்டது

கொழும்பு,செப்.13

ரஷ்யாவின் பிரபலமான மூன்று பல்கலைக்கழகங்களில் மருத்துவ கற்கைக்கான அங்கீகாரத்தை இலங்கை மருத்துவ சபை இரத்துச் செய்துள்ளது.

லுமும்பா பல்கலைக்கழகம் என்று முன்னர் அறியப்பட்ட ரஷ்ய மக்கள் நட்புறவு பல்கலைக்கழகம், ரஷ்ய தேசிய மருத்துவ ஆராய்ச்சி பல்கலைக்கழகம், ருவர் மாநில மருத்துவ பல்கலைக்கழகம் ஆகிய மூன்றும் இலங்கை மருத்துவ சபையின் அங்கீகார பட்டியலிலிருந்து நீக்கப்பட்டிருக்கின்றன.

முன்னறிவித்தல் எதுவுமற்ற இலங்கை மருத்துவ சபையின் இந் நடவடிக்கை தொடர்பில் ரஷ்யா மிகுந்த விசனமுற்றிருப்பதாக இலங்கையிலுள்ள ரஷ்ய தூதரகத்தின் கலாசார பிரிவு தெரிவித்திருக்கிறது.

குறித்த மூன்று பல்கலைக்கழகங்களினதும் அதிகாரிகள் கடந்த பல ஆண்டுகளாக இலங்கை வந்து இலங்கை மருத்துவ சபையுடன் பல்வேறு சந்திப்புக்களை தொடர்ந்து மேற்கொண்டு, அங்கத்துவ கட்டணங்களையும் தவறாது செலுத்திவந்த நிலையில், முன்னறிவித்தல் எதுவுமேயின்றி இப் பல்கலைக்கழகங்கள் மூன்றும் நீக்கப்பட்டிருப்பதாக ரஷ்ய தூதரகம் வெளியிட்ட அறிக்கையில் தெரிவித்திருக்கிறது.

“இரு நாடுகளுக்குமிடையிலான கடந்த அறுபது ஆண்டுகளுக்கும் மேலான ராஜதந்தர உறவில், இலங்கை மாணவர்களுக்கு ரஷ்ய பல்கலைக்கழகங்களில் உயர் கல்விக்கான புலமைப் பரிசில்களை ரஷ்யா வழங்கிவருகிறது. இதன் விளைவாக குறிப்பிடத்தக்க ஏராளமான தொழில்சார் நிபுணர்கள் இங்கு உருவாகியிருக்கிறார்கள். மருத்துவ துறை இதில் விசேடமானது” என்று தெரிவித்துள்ள தூதரக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது: -

“மருத்துவ சபையின் இந்த நடவடிக்கை, ரஷ்யாவின் பிரபலமான பல்கலைக்கழகங்களில் இலவசமாக தங்கள்உயர் கல்வியைத் தொடர இலங்கைப் பிரஜைகளுக்கு வழங்கப்படும் ரஷ்ய அரச புலமைப் பரிசில்களில் பாதிப்பெதனையும் ஏற்படுத்திவிடாது என்று ரஷ்ய தூதரக கலாசார பிரிவு நம்புகிறது.” - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

உலகச் செய்திகள்



## இந்தியாவில் கொரோனா 46 இலட்சத்தை கடந்தது!

புதுடில்லி, செப் 13

இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டோரின் மொத்த எண்ணிக்கை 46 லட்சத்தை கடந்துள்ள நிலையில், உயிரிழந்தோர் எண்ணிக்கை 77,472 ஆக உயர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தியாவில் கொரோனா தொற்று தற்போது வேகமாக பரவி வருகிறது. பரிசோதனைகள் தொடர்ந்து அதிகரிக்கப்படும் நிலையில், கடந்த சில வாரங்களாக பாதிப்பு எண்ணிக்கை மிக அதிக அளவில் உள்ளது.

தினசரி நோய்த்தொற்று 90 ஆயிரத்தை கடந்துவரும் நிலையில், குணமடைந்தவர்களின் எண்ணிக்கையும் உயர்ந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில், நேற்று காலை மத்திய சுகாதாரத்துறை வெளியிட்ட தகவலின்படி இந்தியாவில் கொரோனாவால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 46 இலட்சத்தை கடந்துள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

அந்தவகையில், 46,59,985 ஆக இந்த எண்ணிக்கை உயர்வடைந்துள்ளது.

இதுவரை இல்லாத அளவில் கடந்த 24 மணி நேரத்தில் 97,570 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதோடு, 1,201 பேர் மரணம் அடைந்துள்ளனர் எனவும் இந்தியச் செய்திகள் தெரிவித்துள்ளன.

இதன்மூலம் கொரோனா வைரசால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 77,472 ஆக உயர்ந்துள்ளது. கொரோனா பாதிப்பில் இருந்து குணமடைந்தவர்களின் எண்ணிக்கை 36 இலட்சத்து 24 ஆயிரத்து 197 ஆக உயர்ந்துள்ளது.



## காட்டுத் தீயால் திணறுகின்றது கலிபோர்ணியா

கலிபோர்ணியா, செப் 13

அமெரிக்காவில் அதிக கொரோனா நோயாளிகளைக் கொண்ட முதல் மாகாணமாக கலிபோர்ணியா உள்ளது. அங்கு கொரோனா வைரஸ் மின்னல் வேகத்தில் பரவிவருகிறது. இதனிடையே கொரோனாவால் முடங்கியுள்ள கலிபோர்ணியா மாகாணத்தை காட்டுத்தீயும் திணறடித்து வருகிறது.

கலிபோர்ணியாவில் ஆண்டுதோறும் கோடை காலத்தில் மரங்கள் வெயிலின் காரணமாக காய்ந்து சருகாகி விடும். அந்தச் சமயங்களில் மின்னல் போன்ற இயற்கை காரணிகளாலும், மனிதர்களின் தவறுகளாலும் காட்டுத் தீ ஏற்படுகிறது. அத்துடன் வேகமாக வீசும் காற்றும் தீ பரவுவதற்கு காரணமாக அமைந்து விடுகிறது. இதன் காரணமாக ஒவ்வோர் ஆண்டும் கலிபோர்ணியா மாகாணத்தில் ஒரே சமயத்தில் பல இடங்களில் காட்டுத்தீ பரவி பெரும் பாதிப்பு ஏற்படுகிறது.

அந்த வகையில் கடந்த சில வாரங்களாக கலிபோர்னியா மாகாணத்தின் பல்வேறு பகுதிகளில் காட்டுத் தீ பற்றி எரிந்து வருகிறது. இவற்றில் பெரும்பாலான காட்டுத் தீ அணைக்கப்பட்டு விட்டாலும் ஒரு சில இடங்களில் காட்டுத் தீ கட்டுக்குள் வராமல் தொடர்ந்து பரவி வருகிறது.

இந்நிலையில், பட் கவுண்டி பகுதியில் ஏற்பட்ட காட்டுத் தீ காரணமாக மேலும் 7 பேர் பலியாகினர். இதனால் உயிரிழந்தோர் எண்ணிக்கை 10 ஆக அதிகரித்துள்ளது. அதிகரித்து வரும் காட்டுத் தீயால் நகரை விட்டு வெளியேற பொதுமக்கள் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

# இந்திய கொரோனா தடுப்பூசி சோதனையில் முன்னேற்றம்!

### பாரத் பயோடெக் நிறுவனம் அறிவிப்பு

புதுடில்லி, செப் 13

விலங்குகள் மீது நடத்தப்பட்ட கோவாக்சின் கொரோனா தடுப்பு மருந்து பரிசோதனை வெற்றி பெற்றுள்ளது என பாரத் பயோடெக் நிறுவனம் அறிவித்துள்ளது.

இது தொடர்பாக அந்த நிறுவனம் பகிர்ந்துள்ள ருவீட்டில், ஒக்ஸ்போர்ட் தயாரித்த கோவிஷீல்ட் தடுப்பூசியின் மனித சோதனைகள் நிறுத்தப்பட்டுள்ள நிலையில், இந்தியாவில் தயாரிக்கப்பட்ட கோவாக்சின் அதன் மனித சோதனைகளின் முக்கியமான இரண்டாம் கட்டத்தில் நுழைந்துள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜூலை மாதம் 23 ஆம் திகதி இந்தியாவில் பாரத் பயோடெக் நிறுவனம் தயாரித்த கோவாக்சின் என்ற கொரோனா தடுப்பு மருந்தை மனிதர்களுக்கு சோதிக்க இந்திய மருத்துவ ஆய்வு கழகம் அனுமதி வழங்கியது.

இதற்காக தமிழகத்தில் சென்னை அருகே காட்டாங்குளத்தூரில் உள்ள எஸ்.ஆர்.எம் மருத்துவ கல்லூரி உள்பட இந்தியாவில் 12 நிறுவனங்கள் தேர்வு செய்யப்பட்டு




இந்தச் சோதனையானது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்தியா முழுவதும் நடத்திய சோதனையில் தடுப்பு மருந்து எடுத்துக்கொண்டவர்கள் 28 நாட்களை கடந்து நலமுடன் இருப்பதால், இரண்டாம் கட்டச் சோதனைக்குச் செல்ல தகுதி பெற்றுள்ளது கோவாக்சின் மருந்து. முதல் கட்டத்தில் 18 வயது முதல் 55 வயதுடைய ஆரோக்கியமான தன்னார்வலர்கள் உடலில் கோவாக்சின் செலுத்தப்பட்டது.

இந்நிலையில், இரண்டாம் கட்டத்தில் வயது வரம்பில் சில மாற்றங்கள் செய்யப்பட்டு 12 வயதுடைய இளம் பருவத்தினர் முதல் 65 வயது முதியவர்கள் வரை சோதனையில் ஈடுபடுத்தப்பட உள்ளனர்.

இப்படியான சூழலில் தடுப்பு மருந்து தயாரிப்பாளரான பாரத் பயோடெக் நிறுவனம், கோவாக்சினை கொண்டு விலங்குகளிடம் மேற்கொள்ளப்பட்ட சோதனைகள் வெற்றிகரமாக இருப்பதாக அறிவித்து உள்ளது.

இரண்டு டோஸ் தடுப்பு மருந்து செலுத்தப்பட்ட விலங்குகளில் பாதகமான விளைவுகள் எதுவும் காணப்படவில்லை என்றும் அந்த நிறுவனம் கூறியுள்ளது.

இந்த தடுப்பு மருந்து SARS CoV-2 வைரஸுக்கு எதிரான, இம்யூனோகுளோபின் - ஜி எனப்படும் நோய் எதிர்ப்பு அணுக்களின் எண்ணிக்கையை அதிகரித்து, நோய் கிருமிகளை செயலிழக்க வைத்துள்ளது. மூச்சுக்குழாய், தொண்டை மற்றும் நுரையீரல் திசுக்களில் வைரஸ் கிருமி பெருகுவதையும் இது தடுத்துள்ளது.

தடுப்பு மருந்து வழங்கப்பட்டவர்களுக்கு நிமோனியா அறிகுறிகள் எதுவும் தென்படவில்லை என்றும் அந்த நிறுவனம் மேலும் தெரிவித்துள்ளது.

## சிறுமிகளின் அந்தரங்கப் படங்களை பகிர்ந்த இலங்கை இளைஞன் கைது!

மெல்பேர்ன், செப் 13

இலங்கையைச் சேர்ந்த இளைஞர் ஒருவரை சிறுவர் பாலியல் குற்றச் சாட்டில் அவுஸ்திரேலிய பொலிஸார் கைது செய்துள்ளனர். 23 வயதான இளைஞர் ஒருவரே சிக்கியுள்ளார்.

லண்டனிலும் அமெரிக்காவிலும் வசிக்கும் இரண்டு சிறுமிகளுக்கு இணையவழியாக பாலியல் தொல்லை கொடுத்தார் என்ற குற்றச்சாட்டின் பேரில் லண்டன் பொலிஸாரும், எவ்.பி.ஐ பிரிவினரும் அவுஸ்திரேலியா பொலிஸாருக்கு வழங்கிய தகவலின் அடிப்படையில் இந்தக் கைது இடம்பெற்றுள்ளதாக தெரிக்கப்பட்டுள்ளது.

லண்டன் மற்றும் அமெரிக்காவில் வசிக்கும் 12 - 14 வயது சிறுமிகளுடன் போலி சமூக வலைத்தளக் கணக்கின் மூலம் தொடர்பை ஏற்படுத்தி, அவர்களின் நம்பிக்கைக்குரியவராக தன்னை அடையாளப்படுத்திக் கொண்ட குறிப்பிட்ட இளைஞர், அந்த சிறுமிகளின் அந்தரங்கமான காணொளிகளைப் பெற்றிருக்கிறார் என்று கூறப்படுகிறது.

அதன்பின்னர், மேலும் அவ்வாறான அந்தரங்கக் காணொளிகளை தனக்கு அனுப்புமாறு குறிப்பிட்ட சிறுமிகளை வற்புறுத்தினார் என்று தெரிவிக்கப்படுகிறது.

அதற்கு அந்தச் சிறுமிகள் மறுத்தபோது, தான் ஏற்கனவே பெற்றுக்கொண்ட காணொளிகளை குறிப்பிட்ட சிறுமிகளின் பெற்றோர், உறவினர், நண்பர்கள் ஆகியோரிடம் பகிர்ந்து அவர்களது வாழ்க்கையை சீரழிக்கப்போவதாக மிரட்டினார் என்றும் கூறப்படுகிறது.

இந்த மிரட்டலுக்கும் சிறுமிகள் பணியாதபோது, சொன்னபடி குறிப்பிட்ட சிறுமிகளின் நண்பர்கள் மற்றும் உறவினர்களை தொடர்புகொண்டு அவரிடமிருந்த சிறுமிகளின் அந்தரங்கமான காணொளிகளைப் பகிர்ந்தார் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக்குற்றங்கள் தொடர்பாக லண்டன் பொலிஸாரும் எவ்.பி.ஐ தரப்பினரும் கொடுத்த தகவலின் அடிப்படையில், குறிப்பிட்ட இலங்கை இளைஞரின் முகவரியை கண்டுபிடித்த அவுஸ்திரேலிய பொலிஸார், மெல்பேர்னில் உள்ள வீட்டை கடந்த ஜூன் மாதம் சோதனையிட்டிருந்தனர்.




இந்தச் சோதனையின்போது மீட்கப்பட்ட ஆவணங்களின் பிரகாரம் குறிப்பிட்ட இளைஞர் கைதுசெய்யப்பட்டு, நேற்று முன்தினம் மெல்பேர்ன் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்டார். இவர் 19 குற்றச் சாட்டுகளை எதிர் நோக்கியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



## விமானப் போக்குவரத்து மியான்மரில் முடக்கம்!

யாங்கூன், செப் 13

கொரோனா வைரஸ் (கொவிட்-19) நோய்த் தொற்று பரவலைக் கட்டுப்படுத்துவதற்காக, கடுமையான கட்டுப் பாடுகளை மியன்மார் அரசு அமுல்படுத்தியுள்ளது.

நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை முதல் நடைமுறைக்கு வந்த புதிய கட்டுப்பாடுகளின் ஒரு பகுதியாக நாட்டில் பொது விமானப் போக்குவரத்து முடக்கப்பட்டது.

மேலும், தலைநகர் யாங்கூனிலிருந்து யாரும் வெளியூர் செல்வதற்கும், நாட்டின் பிற பகுதிகளிலிருந்து அந்த நகருக்கு வருவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது.

மியன்மாரில் இதுவரை கொரோனா வைரஸ் தொற்றினால், 2,445பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் 14பேர் உயிரிழந்துள்ளனர். 625 பூரண குணமடைந்து வீடு திரும்பியுள்ளனர்.

# தென்னாபிரிக்க அணிக்கு தடையா?

தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையில் (சி.எஸ்.ஏ.) பல்வேறு முறைகேடு நடப்பதாக புகார் எழுந்துள்ளது.

தலைவர் கிறிஸ் நெஞ்சானி உள்ளிட்டோர் பதவி விலகினர்.

செப். 5 இல் நடக்க இருந்த ஆண்டு பொதுக்குழுக் கூட்டம் தள்ளி வைக்கப்பட்டது. இதற்கு முன்னணி வீரர்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இவ்விடயத்தில் தலையிட்ட தென்னாபிரிக்க விளையாட்டு அமைப்பு மற்றும் ஒலிம்பிக் குழு, தென்னாபிரிக்க கிரிக்கெட் சபையைத் தனது கட்டுப்பாட்டில் கொண்டு வந்தது.

தவிர, 'விசாரணை முடியும் வரை, அனைவரும் பதவி விலக வேண்டும்,' எனவும் கேட்டுக் கொண்டது.

கடந்த ஆண்டு சிம்பாப்வே கிரிக்கெட் சபையை, அந்த நாட்டு அரசு கையில் எடுத்துக் கொண்டது. இதனால், சர்வதேச கிரிக்கெட் கவுன்சில் (ஐ.சி.சி.) சிம்பாப்வே அணிக்கு தடை விதித்தது. பிறகு இது நீக்கப்பட்டது. தற்போது தென்னாபிரிக்க கிரிக்கெட் சபைக்கும் சிக்கல் ஏற்பட்டுள்ளது. இதனால் தென்னாபிரிக்க அணிக்குத் தடை விதிக்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளது.







# ஆஸியிடம் போராடி தோற்ற இங்கிலாந்து!

இங்கிலாந்து அணிக்கெதிரான முதலாவது ஒருநாள் போட்டியில், அவுஸ்திரேலியா அணி 19 ஓட்டங்களால் வெற்றி பெற்றுள்ளது.

இந்த வெற்றியின் மூலம் மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் 1-0 என்ற கணக்கில் அவுஸ்திரேலியா அணி முன்னிலை பெற்றுள்ளது.

மன்செஸ்டர் - ஓல்ட் ட்ரப்போர்ட் மைதானத்தில் நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இந்தப் போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இங்கிலாந்து அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் களமிறங்கிய அவுஸ்திரேலியா அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட்டுகள் இழப்புக்கு 294 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதில் அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, கிளென் மக்ஸ்வெல் 77 ஓட்டங்களையும், மிட்செல் மார்ஷ் 73 ஓட்டங்களையும் பெற்றுக் கொண்டனர். பந்துவீச்சில், ஜொப்ரா ஆர்செர் மற்றும் மார்க் வுட் ஆகியோர் தலா 3 விக்கெட்டுகளையும், அடில் ராஷித் 2 விக்கெட்டுகளையும் கிறிஸ் வோக்ஸ் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனைத் தொடர்ந்து 295 என்ற வெற்றி இலக்கை நோக்கிப் பதிலுக்கு களமிறங்கிய இங்கிலாந்து அணியால், 50 ஓவர்கள் நிறைவில் 9 விக்கெட் இழப்புக்கு 275 ஓட்டங்களை மட்டுமே பெற முடிந்தது. இதனால் அவுஸ்திரேலியா அணி 19 ஓட்டங்களால் வெற்றி பெற்றது.

இதன்போது அணியின் அதிகபட்ச ஓட்டங்களாக, சேம் பிளிங்ஸ் 118 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார். இதுவே அவரது ஒருநாள் கிரிக்கெட்டில் முதல் சதமாகும். ஜோனி பேயர்ஸ்டொவ் 84 ஓட்டங்களை பெற்றுக்கொண்டார்.

அவுஸ்திரேலியா அணியின் பந்துவீச்சில், ஆடம் செம்பா 4 விக்கெட்டுகளையும், ஜோஸ் ஹசில்வுட் 3 விக்கெட்டுகளையும், பெட் கம்மின்ஸ் மற்றும் மிட்செல் மார்ஷ் ஆகியோர் தலா 1 விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இந்தப் போட்டியின் ஆட்டநாயகனாக பந்துவீச்சில் 3 விக்கெட்டுகளை வீழ்த்திய அவுஸ்திரேலிய பந்துவீச்சாளர் ஜோஸ் ஹசில்வுட் தெரிவு செய்யப்பட்டார்.

அமெரிக்க பகிரங்க ரென்னிஸ்:

# டொமினிக் - ஸ்வெரவ் இறுதிக்கு முன்னேற்றம்

அமெரிக்க பகிரங்க ரென்னிஸ் தொடரின், ஆண்களுக்கான ஒற்றையர் பிரிவு அரையிறுதிப் போட்டிகளில் டொமினிக் தியோம் மற்றும் அலெக்ஸாண்டர் ஸ்வெரவ் ஆகியோர் வெற்றி பெற்று, இறுதிப்போட்டிக்கு முன்னேறியுள்ளனர்.



உள்ளூர் நேரப்படி நேற்று சனிக்கிழமை நடைபெற்ற முதல் அரையிறுதிப் போட்டியில், ஒஸ்திரியாவின் டோமினிக் தியேம், ரஷ்யாவின் டேனில் மெத்வதேவ் ஆகியோர் பலப்பரீட்சை நடத்தினர்.

பரபரப்பாக நடைபெற்ற இப்போட்டியில், 6-2, 7-6, 7-6 என்ற நேர் செட் கணக்குகளில் வெற்றிபெற்று, டோமினிக் தியேம் இறுதிப் போட்டிக்கு முன்னேறியுள்ளார்.

இரண்டாவது அரையிறுதிப் போட்டியில், ஜேர்மனியின் அலெக்ஸாண்டர் ஸ்வெரவ், ஸ்பெயினின் பப்லோ கரேனோ புஸ்டாவும் மோதினார்.

விறுவிறுப்பாக நடைபெற்ற இந்தப் போட்டியில், 3-6, 2-6, 6-3, 6-4, 6-3 என்ற செட் கணக்குகளில் அலெக்ஸாண்டர் ஸ்வெரவ் வெற்றிபெற்று இறுதிப் போட்டிக்குள் நுழைந்தார்.




# எல்.பி.எல் வீரர்களின் ஏலம் ஒக்ரோபர் முதலாம் திகதி!

2020 லங்கா பிரீமியர் லீக்கின் (எல்.பி.எல்) வீரர் ஏலம் ஒக்ரோபர் முதலாம் திகதி நடைபெறும் என இலங்கை கிரிக்கெட் ஒரு அறிக்கையில் தெரிவித்துள்ளது.

கிறிஸ் கெய்ல், டேரன் சமி, டேரன் பிராவோ, ஷஹித் அப்ரிடி, ஷகிப்-அல்-ஹசன், ரவி போபரா, கொலின் மன்ரோ, முனாப் பட்டேல், வெர்னான் பிலாண்டர் உள்ளிட்ட உட்பட சுமார் 150 பிரபல சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் ஏலத்தில் உள்ளனர்.

ஒவ்வொரு உரிமையாளரும் ஆறு சர்வதேச வீரர்களை வாங்க முடியும். மொத்தம் 30 சர்வதேச கிரிக்கெட் வீரர்கள் மற்றும் 65 உள்ளூர் கிரிக்கெட் வீரர்களை கொண்ட ஐந்து அணிகள் உருவாகும். இந்த போட்டிகள் எதிர்வரும் நவம்பர் 14 முதல் டிசெம்பர் 6 வரை நடைபெறும்.

ஓகஸ்ட் மாதத்தில் போட்டி நடைபெற திட்டமிடப்பட்டிருந்தபோதும், கொரோனா தொற்று காரணமாக ஒத்திவைக்கப்பட்டிருந்தது.

போட்டிகள் தம்புள்ள, பல்லேகல மற்றும் அம்பாந்தோட்டை மைதானங்களில் நடைபெறும்.

லங்கா பிரீமியலர் லீக்கின் தொடக்க நிகழ்வுகள் அம்பாந்தோட்டை மைதானத்தில் நடைபெறும்.

# பயிற்சியை தொடங்கினார் தீபக் சஹார்!

கொரோனாவிலிருந்து குணமான தீபக் சஹார், இதர வீரர்களுடன் இணைந்து பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்.

கொரோனா பரவல் காரணமாக இந்த ஆண்டு இந்தியாவில் நடைபெறவிருந்த ஐ.பி.எல் . போட்டி தள்ளிவைக்கப்பட்டது.

ஐ.பி.எல் போட்டிக்காக டுபாய், அபுதாபிக்குச் சென்றுள்ள அனைத்து அணி வீரர்களும் பயிற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள்.

இரண்டு வீரர்கள் உட்பட சென்னை சுப்பர் கிங்ஸை சேர்ந்த 13 பேருக்கு கொரோனா தொற்று உறுதியானது. இதையடுத்து அந்த இரு வீரர்கள் தவிர மற்ற சென்னை சுப்பர் கிங்ஸ் வீரர்கள் பயிற்சியைத் தொடங்கினார்கள்.

இந்நிலையில் கொரோனாவால் பாதிக்கப்பட்டிருந்த சென்னை சுப்பர் கிங்ஸ் வேகப்பந்து வீச்சாளர் தீபக் சஹார், குணமடைந்துள்ளார். இதையடுத்து அணியினருடன் அவர் இணைந்துள்ளார். சில பரிசோதனைகளுக்குப் பிறகு பயிற்சியைத் தொடங்க தீபக் சஹாருக்கு இந்திய கிரிக்கெட் சபை அனுமதி அளித்துள்ளது.



# மரண அறிவித்தல்



மலர்வு
16/11/1948

உதிர்வு
10/09/2020

வவுனியாவைப் பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்ட

## வைத்தியகலாநிதி Dr.ஞானேஸ்வரன்

மனோதத்துவ நிபுணர்

வைத்திய கலாநிதி Dr.ஞானேஸ்வரன் 10.09.2020இல் சிவபதமடைந்தார். அன்னார் காலஞ்சென்ற பிரபல வழக்கறிஞர் குமாரவேலு ஐயாத்துரை, முத்தம்மா(முத்து) அவர்களின் அன்பு மகனும், பத்மினி ஞானேஸ்வரன் (மிருகவைத்தியர்) அவர்களின் அன்புக் கணவரும் Dr.நிரஜா, Dr.செந்தூரன் ஆகியோரின் அன்புத் தந்தையும், காலஞ்சென்ற வழக்கறிஞர் கேதீஸ்வரன் (நகரபிதா, வவுனியா) காலஞ்சென்ற யோகிஸ்வரன் மற்றும் ராஜேஸ்வரன்(U.S.A), ஜானகி மனோகரன்(Aus), ஜெகதீஸ்வரன்(Aus), ராமேஸ்வரன்(Aus), சாரதா சிவகுமார்(Aus), Dr.ரஞ்சினி கிருஷ்ணாந்தன்(Aus), விக்னேஸ்வரன்(Canada), விமலேஸ்வரன்(Canada) ஆகியோரின் அன்புச் சகோதரரும், Dr.கருணானந்தன் கோகிலம் (Sri Lanka) அருணாசலம் நாகேந்திரா(London) அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார். இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளுமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

**பார்வை நேரம்:**
Tuesday, 15 Sep 2020 - 2:00 PM - 8:00 PM
Wednesday, 16 Sep 2020 - 9:00 AM - 10:00 AM

**தகனக் கிரியைகள்:**
Wednesday, 16 Sep 2020 - 11:00 AM

இறுதிக் கிரியைகள் இடம்பெறும் இடம்

## Highland Funeral Home

3280 Sheppard Avenue East Toronto Ontario M1T 3K3

தொடர்புகளுக்கு:
செந்தூரன்(மகன்) 905 424 9859
சகோதரர் விக்கி: 647 821 6475
விமல்: 647 302 2875
வரன்: 905 999 7193
நாகேந்திரா: 0044 7721 863 625(UK)

JR Print - 020 8503 6643

செய்திகள்

# 10 அடிக்கு கஞ்சா வளரும்வரை என்ன செய்கின்றது பொலிஸ்?

## பாதுகாப்புச் செயலர் காட்டமான கேள்வி



கொழும்பு, செப். 13

**பொலிஸார் தமது கடமைகளைச் சரியாக மேற் கொள்ளாதமையின் விளைவாகவே, போதைப் பொருட்களின் பாவனை சமூகத்தில் அதிகரித்துள் ளது என பாதுகாப்புச் செயலர் மேஜர் ஜெனரல் கமால் குணரட்ன குற்றம்சாட்டியுள்ளார்.**

ஒரு கஞ்சாச் செடி 10 அடிவரை வளரும் அளவுக்குப் பொலிஸார் அசமந்தமாக இருக்கிறார்களா என்றும் அவர் கேள்வி எழுப்பி யுள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக் கையில்-

அரசால் பொலிஸாருக்கு மிகப்பெரிய பொறுப்பு வழங்கப் பட்டுள்ளது. இதனால்தான் அனைவருக்கும் சீருடையும் ஆயுதங்களும் வழங்கப்பட்டுள்ளன.


இந்தப் பொறுப்பை உணர்ந்து செயற்படுவது பொலிஸாரின் கடமையாகும். இதனைத் தான் பொது மக்களும் எதிர்ப்பார்க்கிறார்கள். சில சிறப்பான பொலிஸார் இருக்கும் நேரத்தில் சில மோசமான பொலி ஸாரும் இருக்கத்தான் செய்கிறார் கள்.

சில பிரதேசங்களில் 10 அடிக்கும் மேல் வளர்ந்த கஞ்சா செடிகள் பிடிபட்டுள்ளன. ஒரு கஞ்சா செடி 10 அடிவரை வளரும் அளவுக்கு பொலிஸார் அசமந்தமாக இருக்கிறார்கள் என்றே கூறவேண்டும்.

எஸ்.ரி.எப். சென்றுதான் அவற்றைப் பிடிக்கின்றார்கள். அத்தோடு, இவ்வாறான பாரிய செய்கைகளை இலகுவாகச் செய்துவிட முடியாது. பைக்கோ இயந்திரம் ஊடாகத் தான் மண் நிரப்பப்பட்டு, கஞ்சா செடிகள் ஏக்கர் கணக்கில் பயிரிடப்படுகின்றன.

இதையெல்லாம் அவதானிக் காமல் பொலிஸார் என்ன செய்கிறார்கள்? குறைந்தது, தமது பிரதேசத்தில் வளரும் கஞ்சாச் செடியைக்கூட கண்டு பிடித்துக்கொள்ள முடியாவிட் டால் வெட்கப்படவேண்டும்.

சில பிரதேசங்களில் பொலி ஸார் ஒழுங்காக வேலை செய்வதில்லை என்றுதான் கூறவேண்டும். இவ்வாறான சூழ்நிலையை மாற்றியமைக்க வேண்டும் என்றுதான் மக்கள் மூன்றில் இரண்டு பெரும்பான்மையை ஜனாதிபதிக்கு வழங்கினார்கள் - என்றார்.



# நாமல் தம்பதிக்கு ஆண் குழந்தை திருமண நாளிலேயே பிறந்தது!

கொழும்பு, செப் 12

விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சரும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் மூத்த புதல்வருமான நாமல் ராஜபக்ஷ நேற்று ஆண் குழந்தை யொன்றுக்குத் தந்தையானார்.

கடந்த வருடம் செப்ரெம்பர் மாதம் 12ஆம் திகதி, லிமினியை நாமல் கரம் பிடித்திருந்தார்.

ஓராண்டு திருமண நாள் பூர்த்தியை நேற்று கொண்டாடிய நாமல் - லிமினி தம்பதியினருக்கு நேற்று ஆண் குழந்தையும் கிடைத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கைதிகளின் எண்ணிக்கை 30 ஆயிரத்தை தாண்டியது

கொழும்பு, செப் 13

நாட்டின் வரலாற்றில் முதன்முறையாக சிறைகளில் உள்ள கைதிகளின் எண்ணிக்கை 30 ஆயிரத்தைத் தாண்டியுள்ளது.

சிறைச்சாலைத் திணைக் களம் வெளியிட்டுள்ள புதிய அறிக்கையில், கடந்த செப்ரெம்பர் 9ஆம் திகதி நிலவரப்படி 30 ஆயிரத்து 54 கைதிகள் சிறைகளில் அடைக்கப்பட்டுள்ளனர்.

எவ்வாறாயினும், சிறைகளில் 11 ஆயிரம் கைதிகள் மட்டுமே இருக்க முடியும் என்று திணைக்களம் தெரிவித்துள்ளது.

28 ஆயிரத்து 469 ஆண் கைதிகளும் ஆயிரத்து 585 பெண் கைதிகளும் தற்போது சிறைகளில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர்.

மேன்முறையீட்டு மனு தாக்கல் செய்த ஆயிரத்து 404 கைதிகளும் தண்டனை பெற்ற 7 ஆயிரத்து 211 கைதிகளும் சிறைகளில் உள்ளனர். அத்து டன், 21 ஆயித்து 439 பேர் விளக்கமறியலில் உள்ளனர்.

தண்டனை பெற்ற தங்கள் தாய்மார்களுடன் 43 குழந்தைகள் சிறைகளில் உள்ளனர். 195 வெளிநாட்டவர்களும் சிறையில் அடைக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை, போகம்பரை சிறைச்சாலையை மீளவும் கையகப்படுத்த ஜனாதிபதி கோட்டாபய உத்தரவு பிறப்பித்துள்ளார்.

சிறைச்சாலைகளில் நெரிசலைக் குறைக்கும் நோக்கத்துடன் போகம்பரை சிறைச்சாலை கையகப்படுத்தப்படும் என சிறைச்சாலை சீர்திருத்தங்கள் மற்றும் கைதிகள் மறுவாழ்வு அமைச்சர் சுதர்ஷினி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்தார்.

# ஹெரோயின் விற்ற குற்றச்சாட்டில் பண்டத்தரிப்பில் பெண் கைதானார்

யாழ்ப்பாணம், செப் 13

உயிர்க் கொல்லி போதைப்பொருளான ஹெரோயினை விற்பனை செய்யும் நோக்குடன் உடைமையில் வைத்திருந்தார் என்ற குற்றச்சாட்டில் பெண் ஒருவர் இளவாலைப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரிடமிருந்து 2 கிராம் ஹெரோயின் போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளது.

பண்டத்தரிப்பு பனிப்புலம் பகுதியில் உள்ள அவரது வீட்டில் வைத்து சந்தே நபர் நேற்று முன்தினம் இரவு கைது செய்யப்பட்டார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

இளவாலைப் பொலிஸா ருக்குக் கிடைத்த இரகசியத் தகவலின் அடிப்படையில் 35 வயதுடைய பெண்ணே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.



# ராஜபக்ஷ ஆட்சியை கவிழ்த்தே தீருவோம்

## சூளுரைக்கிறார் சஜித் பிரேமதாஸ

கொழும்பு, செப் 13

மக்களை அணி திரட்டி மாபெரும் போராட்டங்களை முன்னெடுத்து ராஜபக்ஷக்களின் இந்த ஆட்சியைக் கவிழ்த்தே தீருவோம் என பிரதான எதிர்க்கட்சியான ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இது குறித்து அவர் மேலும் தெரிவிக்கையில்-

அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டவரைவுக்கு எதிரான எமது போராட்டத்தை மாதுளுவாவே சோபித தேரரின் நினைவுத் தூபிக்கு முன்னால் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்திருக்கின்றோம். இனிவரும் நாட்களில் இந்தப் போராட்டம் மக்களை அணி திரட்டி நாடெங்கும் முன்னெடுக்கப்படும்.

மூன்றிலிரண்டு பெரும்பான்மை என்ற மமதையுடன் ஆட்சி அதிகாரத்திலிருக்கும் ராஜபக்ஷ அரசு மக்கள் ஆணைக்கு மதிப்பளித்து நடக்க வேண்டும். ஜனநாயகத்துக்கு முரணான செயற்பாடு களிலிருந்து உடனடி யாகத் திருந்தி நடக்க வேண்டும். இல்லையேல் மாபெரும் மக்கள் போராட்டத்தின் மூலம் இந்த அரசின் கொட் டத்தை அடக்குவோம்.

ஜனாதிபதித் தேர்தலிலும் பொதுத்தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணைக்கு மாறாக இந்த அரசு செயற்படுகின்றது. அதில் ஒன்றுதான் அரசமைப்பின் 20ஆவது திருத்தச் சட்டம். இதற்கு எதிராக நீதிமன்றத்தையும் நாம் நாடவுள்ளோம்.

20ஆவது திருத்தச் சட்டமூலத்தை நாடாளு மன்றத்தில் முன்வைக்கும் திட்டத்தை இந்த அரசு உடன் கைவிடவேண்டும்- என்றார்.

# பாசிக்குடா கடலில் நீராடச் சென்ற சிறுவன் சடலமாக மீட்பு!

மட்டக்களப்பு, செப் 13

மட்டக்களப்பு- பாசிக்குடாக் கடலில் இரு நண்பர்களுடன் நீராடச் சென்ற 17 வயதுடைய பாடசாலை மாணவன், நீரில் மூழ்கி உயிரிழந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

நேற்று முன் தினம் வெள்ளிக்கிழமை மாலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில், வாழைச்சேனை- செம்மன்ஓடை 4 பிரிவு ஹிஸ்புல்லா வீதியைச் சேர்ந்த (வயது-17) யாவாத் முகமட் றிஸ்வி என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மாணவன், சம்பவதினமான நேற்று முன் தினம் அவரது நண்பர்கள் இருவருடன் பாசிக்குடா கல்மலை கடல் பகுதியில் நீராடியபோது நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

அவரது உடல், பிரேத பரிசோதனைக்காக வாழைச்சேனை வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# வெலே சுதாவின் சகோதரி உட்பட மூன்றுபேர் கைது!

கொழும்பு,செப்.13

சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட் டுள்ள ஹெரோயின் கடத்தலுடன் தொடர்புடைய வெலே சுதாவின் சகோதரி உட்பட மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைது செய்யப்படும் போது அவர்களிடம் இருந்து கேரளக் கஞ்சா தொகையொன்று கைப்பற்றப்பட்டுள்ளது.

இதேவேளை, நாடு பூராகவும் மேற்கொள்ளப்பட்ட விசேட தேடுதல் நடவடிக்கையின் போது 4,186 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களுள் போதைப்பொருள் தொடர்பில் 1205 பேரும், பிடியாணை பிறப்பிக்கப்பட்டிருந்த 1143 பேரும் அடங்குவதாக பொலிஸார் தெரிவித்தனர்.

ஈழநாடு
வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959
Eelanadu

# கொரோனா முகக்கவசத்தால் யாழில் காசநோய் தொற்றும் குறைவடைவு!

## மருத்துவர் ஜமுனானந்தா தகவல்



யாழ்ப்பாணம்,செப்.13

**யாழ்.மாவட்டத்தில் இவ்வருடம் இதுவரையான காலப் பகுதியில் 260 காச நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளதாக யாழ். போதனா வைத்தியசாலையின் பிரதிப் பணிப்பாளர் மருத்துவர் சி.யமுனாநந்தா தெரிவித்தார்.**

கொரோனாவுக்காக பயன்படுத்திய முகக் கவசம் காரணமாகவே இவ்வாறு காசநோய்த்தொற்று குறைந்துள்ளதாக அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் -

இந்த வருடம் ஓகஸ்ட் மாதம் மட்டும் 160 காச நோயாளர்கள் யாழ்.மாவட்டத்தில் இனங்காணப்பட்டு சிகிச்சை அளிக்கப்பட்டுள்ளார்கள். குறிப்பாக இந்த வருடம் 260 காச நோயாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். கொரோனாவிற்குப் பின்னர் இருமல் அறிகுறியுடையவர்கள் வைத்தியசாலைக்கு வருவது குறைவடைந்துள்ளது.

50 பேருக்கு மேல் காச நோய் இனங்காணப்படாமல் உள்ளார்கள். இவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்த வேண்டும். யாழ்.போதனா வைத்தியசாலையின் வெளிநோயாளர் பிரிவிலும் காச நோய்க்குரிய சிகிச்சைகள், சளிப்பரிசோதனை செய்யக்கூடிய வசதிகள் செய்யப்பட்டுள்ளன.

அடுத்ததாக, யாழ்.மாவட்டத்தினைப் பொறுத்தவரை காச நோயாளர்களுக்கான பிரத்தியேக வைத்தியசாலை மயிலிட்டியில் அமைவது நல்லது. அதற்குரிய நடவடிக்கைகளை நாங்கள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபர் மூலம் மேற்கொள்ள வேண்டும். உலக சுகாதார நிறுவனமும் பொது மக்களும் கொவிட்-19 பாதிலிருந்து படிப்பினையைக் கற்றுக்கொள்ள வேண்டும். அதாவது,பொதுச் சுகாதாரத்தை மேம்படுத்த வேண்டும்.

பொதுவாக சுவாச தொற்று நோய்கள் இவ்வாறு வரும்போது அவர்களைத் தனிமைப்படுத்தி வைத்திருப்பதற்கான வைத்தியசாலை மிகமிக இன்றியமையாததாகும். அதனை நாங்கள் இந்த கொரோனாவிற்குப் பின்பான ஒரு படிப்பினையாகக் கருத்தில் கொண்டு சுவாச தொற்று நோய்களை தடுப்பதற்குரிய பிரத்தியேக வைத்தியசாலையை மயிலிட்டியில் அமைப்பதற்கு, அரசாங்க அதிபரின் உதவியுடனும் வடமாகாண ஆளுநரின் உதவியுடனும் மேற்கொள்ள வேண்டும்.

இது கடந்த 30 வருடங்களாக கிடப்பில் போடப்பட்டுள்ளது. இதனை நாங்கள் கவனத்தில் கொள்ள வேண்டும். காச நோயாளிகளுக்கு சிகிச்சை மற்றும் காச நோயினை இல்லாது செய்வதற்கான முயற்சியை நாங்கள் முன்னெடுக்கவேண்டும்.

மேலும், காசநோயினைக் கண்டறிய பி.சி.ஆர்.தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்றது.

அது தற்போது, யாழ்ப்பாணம் பண்ணையிலுள்ள ஆய்வு கூடத்திலும் உள்ளது. கொரோனா நோயினை கண்டறிவதற்காகக் கொண்டு வரப்பட்ட பி.சி.ஆர்.கருவி மூலமும் காசநோயைக் கண்டுபிடிக்கலாம். எனவே யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல இலங்கையின் சகல பகுதிகளிலும் கொரோனாவினைக் கண்டறிவதற்கு பயன்படுத்தப்படும் பி.சி.ஆர்.கருவிகளை காசநோயைக் கண்டறிவதற்கும் பயன்படுத்தினால் காசநோயினை இன்னும் விரைவாக கண்டறிந்து குணப்படுத்துவதோடு இலங்கையிலிருந்து காச நோயை முற்றாக இல்லாதொழிக்க முடியும்.

கொரோனா நோயைக் கட்டுப்படுத்துவதில் நாங்கள் கண்ட வெற்றியை காச நோயாளர்களையும் கண்டறிந்து கட்டுப்படுத்துவதற்கு இந்த பி.சி.ஆர். கருவியினைப் பயன்படுத்த வேண்டும்.

கொரோனா நோய்த் தொற்றின் பின்னர் காச நோயைக் கண்டறிதல் வீதம் குறைந்துள்ளது. இதற்கு இரண்டு காரணங்கள் உண்டு. ஒன்று நோயாளிகள் வராமல் இருக்கலாம். அடுத்ததாக முகக்கவசம் அணிவதனால் காசநோய் தொற்றுக் குறைவடைவதற்கும் சாத்தியக்கூறு காணப்படுகிறது - என்றார்.



# வவுனியாவில் அதிகரிக்கும் காட்டுயானைகளின் தாக்கம்



வவுனியா, செப் 13

வவுனியா செட்டிக்குளம் பிரதேச சபைக்குட்பட்ட சின்னத்தம்பனை கிராமத்தில் சுமார் ஒரு ஏக்கர் தென்னைமரங்கள் காட்டு யானைகளினால் அழிவடைந்துள்ளன.

நேற்று முன்தினம் இரவு அந்தப் பிரதேசத்தினுள் ஐந்துக்கு மேற்பட்ட காட்டு யானைகள் நுழைந்து ஒரு ஏக்கர் அளவிலான பயன்தரு மரங்களான தென்னை, வாழை மரங்களைச் சேதமாக்கியுள்ளன.

யுத்தத்தினால் இடம்பெயர்ந்து மீள்குடியேறிய இந்த மக்கள் தமது வாழ்வாதாரமாக விவசாயம் மற்றும் தோட்டச்செய்கையில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவ்வாறான நிலையில் கடந்த ஐந்து வருடங்களாக காட்டு யானைகளின் தாக்குதலால் அவர்கள் தமது வாழ்வாதாரத்தை இழக்கவேண்டிய நிலையேற்பட்டுள்ளது.

இந்தப் பிரச்னை காரணமாக யானை வேலியை அமைத்து தருமாறு சம்மந்தப்பட்ட அதிகாரிகளிடம் பிரதேச மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

# தனிமைப்படுத்தல் நிலையத்தில் தங்கியிருந்த நபர் தப்பி ஓட்டம்!

வவுனியா, செப் 13

வவுனியா பெரியகாடு இராணுவ முகாம் தனிமைப்படுத்தல் நிலையத்தில் வெளிநாட்டிலிருந்து விசேட விமானத்தில் அழைத்துவரப்பட்டு தங்கவைக்கப்பட்டிருந்த சிலாபம் பகுதியை சேர்ந்த ஒருவர் நேற்று முன்தினம் இரவு தப்பி ஓடியுள்ளார் என இராணுவ முகாம் தனிமைப்படுத்தல் நிலையத் தகவல்கள் தெரிவித்தன.

கடந்த வாரம் கட்டார் நாட்டிலிருந்து விசேட விமானத்தில் அழைத்து வரப்பட்டிருந்த 36 வயதுடைய சிலாபம் மாதம்பே பகுதியைச் சேர்ந்த விஜித்த றுவான் குணவர்த்தன என்ற நபரே இவ்வாறு தனிமைப்படுத்தல் நிலையத்திலிருந்து தப்பி ஓடிவிட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது.

அந்த நபரை கைது செய்வதற்கு பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் பொதுமக்கள் இது குறித்து அவதானமாக இருக்குமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# சர்வாதிகார ஆட்சிக்கு மீண்டும் இடம் இல்லை

## ஜே.வி.பி. கூறுகின்றது

நாட்டில் மீண்டுமொரு சர்வாதிகார ஆட்சிக்கு ஒருபோதும் இடமளிக்கமாட்டோம் என மக்கள் விடுதலை முன்னணியின்(ஜே.வி.பி.) மத்திய குழு உறுப்பினர் நாமல் கருணாரட்ன தெரிவித்துள்ளார்.

19 ஆவது திருத்தச்சட்டத்தை இல்லாதொழிக்கவேண்டுமென அரசில் அங்கம் வகிக்கும் சிலர் தொடர்ந்து கூறி வருகின்றனர். இதற்கிடையில் ஏனைய பல கட்சிகள் 19 ஆவது திருத்தச்சட்டத்தை ஒருபோதும் நீக்கக்கூடாது எனவும் அதில் சிறுபான்மையினரின் பாதுகாப்பு உள்ளிட்ட விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதாகவும் தொடர்ந்து வலியுறுத்தி வருகின்றன.


இந்நிலையிலேயே நாமல் கருணாரட்ன, 19 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பாக கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

நிறைவேற்று அதிகார முறைமையை இல்லாதொழிக்க வேண்டும் என்றே நாட்டில் இதுவரையான காலமும் போராட்டங்கள் இடம்பெற்றன.

இதனால்தான் 19 ஆவது திருத்தச்சட்டம் நிறைவேற்றப்பட்டது. இதில் நல்லது கெட்டது என இரண்டும் உள்ளன. இதிலுள்ள பிழைகளை நிவர்த்தி செய்து நாம் முன்னோக்கிச் செல்ல வேண்டும். - என்றார்.

# இ.போ.சவின் தலைவர் நேற்று வவுனியா சாலைக்கு விஜயம்



வவுனியா, செப் 13

இலங்கை போக்குவரத்துச் சபையின் தலைவர் கிங்ஸிலி ரணவக்க இ.போ.ச வவுனியாசாலைக்கு நேற்று விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

இதன்போது அவருக்கு மாலை அணிவித்து கௌரவமளிக்கப்பட்டிருந்து. அத்துடன் இ.போ.சவின் வவுனியா சாலையின் உத்தியோகத்தர்கள், சாரதிகள் மற்றும் நடத்துநர்களுடனான சந்திப்பு ஒன்றும் இடம்பெற்றது.

இதன்போது வவுனியா சாலை உத்தியோகத்தர்கள், சாரதிகள், காப்பாளர்கள் எதிர்நோக்கும் பிரச்னைகள் தொடர்பாக கேட்டறிந்ததோடு வவுனியா சாலையின் எதிர்கால நடவடிக்கை தொடர்பாகவும் கலந்துரையாடப்பட்டது.

# கண்டியில் மீண்டும் நில அதிர்வு

கொழும்பு, செப் 13

இலங்கையில் நேற்று மீண்டும் நில அதிர்வுகள் ஏற்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த கண்டி - திகண மற்றும் தெல்தெனிய பகுதிகளில் மிதமான நில அதிர்வு பதிவாகியுள்ளது.

இந்த நில அதிவு ரிச்டர் அளவில் 1.79 ஆக பதிவாகியுள்ளது. 2 ரிச்டர் அளவுக்கு மேல் சென்றாலே அதனை நில அதிர்வாக கருத முடியும் என ஏற்கனவே புவிச் சரிதவியல் திணைக்களம் அறிவித்திருந்தது.

கடந்த வாரமும் கண்டியின் சில பதிகளில் நில அதிர்வு ஏற்பட்டிருந்தது. கண்டி, ஹாரகம மற்றும் அநுரகம ஆகிய பகுதிகளில் நில அதிர்வு பதிவாகியது.

இந்தப் பகுதியில் பாரியளவில் முன்னெடுக்கப்படும் சுண்ணாம்புக்கல் அகழ்வு காரணமாகவே இவ்வாறான நிலைமை ஏற்பட்டுள்ளதென பிரதேச மக்களும் சூழலியலாளர்களும் தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

## DAN தமிழ் ஒளி

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்
6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருதி கோகிலா மகேந்திரன்




7.15 மணி : கதைவழி அறமொழி
வழங்குபவர் திரு. எப்.எக்ஸ்அன்ரன் கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : நாளும் நல்லவை
வழங்குபவர் திரு. ந. சத்தியபாலன் எழுத்தாளர், ஓய்வுபெற்ற ஆசிரியர்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை (நேரலை)
10.30 மணி : அறிந்தும் அறியாமலும்
11.00 மணி : ரசிகன் என்கிற தலைவன்



12.00 மணி : வீக் என்ட் கொண்டாட்டம் (நேரலை)

**பகல்**
1.00 மணி : மழலைகள் நேரம்
1.30 மணி : வீக் என்ட் மூவி
ஹொலிவுட் திரைப்படங்கள்
4.30 மணி : காட்டூன் தமிழ்
5.00 மணி : கலாய்க்கலாம் வாங்க (நேரலை)
6.00 மணி : திரைக்கதம்பம்

**இரவு**
7.00 மணி : ஸ்பொட் லைட்
8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : சொல்லாடுகளம்



10.00 மணி : பதிவு

## DAN COMEDY HD

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
சூரி நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : திரைப்படம்
ஜெய், அஞ்சலி, சர்வானந்த் மற்றும் அனன்யா நடிப்பில்
எங்கேயும் எப்போதும்
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

## DAN VISION HD

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : ஒஸ்கார் ராகங்கள்
10.00 மணி : டான் மிக்ஸ் மசாலா (நேரலை)

**பகல்**
12.00 மணி : நட்சத்திரம்
1.00 மணி : மஞ்சள் வெயில் மாலையிலே (நேரலை)
3.00 மணி : இசை மேடை
4.00 மணி : வீக் என்ட் எக்ஸ்ப்றஸ் (நேரலை)
5.00 மணி : என்றென்றும் இசை

**இரவு**
7.00 மணி : பாட்டு தலைவர்கள்
8.00 மணி : பச்சை கிளி முத்துச்சரம்
9.00 மணி : நேசித்த நினைவுகள்
10.00 மணி : பக் ரு பக்

## கல்வி tv CHANNEL-1

**காலை**
6.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
ஊடகம் மறு ஒளிபரப்பு
7.00 மணி : 10.00 மணி - க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) வணிகக்கல்வி
மறு ஒளிபரப்பு
8.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு) உயிரியல்
மறு ஒளிபரப்பு
9.00 மணி : க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு)
அளவியல்
10.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) கணக்கீடு
11.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு)
இரசாயனவியல்

**பகல்**
12.00 மணி : க.பொ.த உயர்தரம் (கணிதம்,விஞ்ஞானப்பிரிவு)
2.00 மணி : க.பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு)
3.00 மணி : தரம் 5 மாதிரி வினாத்தாள்
4.00 மணி : தரம் 5 சுற்றாடல்
5.00 மணி : தரம் 5 கணிதம்
6.00 மணி : தரம் 6-9 ஆங்கிலம்

**இரவு**
7.00 மணி : பொது சிங்களம்
7.30 மணி : க.பொ.த உயர் தரம் மாதிரி வினாத்தாள்

## ஓம் ரிவி

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.20 மணி : சின்மய சிந்தனை
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : திருவிழா - 01
10.00 மணி : புதியதோர் தொடக்கம்
10.30 மணி : பஜனை
11.00 மணி : பக்திமலர்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : திருவிழா - 02
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : அருளுரை
7.30 மணி : திருவாசகம்
08.00 மணி : திருவிழா - 01

## CHANNEL HOLY MARY

**காலை**
7.00 மணி - புனித அந்தோனியார் ஆலய திருவிழா திருப்பலி நேரலை
8.00 மணி - ஜெபமாலை
9.00 மணி - மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
11.00 மணி - ஜெபமாலை

**பகல்**
12.00 மணி - திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி - மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி - நற்சிந்தனை
3.00 மணி - மறை வகுப்பு
4.00 மணி - நிதர்சனம்
4.30 மணி - திருகோணமலை திருப்பலி
5.30 மணி - பாடல்

## Pirai Television

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய சிறுவர் பாடல்
8.00 மணி : சற் வித் குட்டீஸ்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : வேர் கொள்
11.00 மணி : மனிதம்
11.30 மணி : சுக வாழ்வு

**பகல்**
12.00 மணி : லுகர் அதான்
12.30 மணி : அன்னிஸா
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : சற் வித் குட்டீஸ்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்

**இரவு**
7.00 மணி : பிறை பிரசங்கம்
8.00 மணி : பாடல்
8.30 மணி : மனிதம் வித் றிஸ்வான்
9.00 மணி : Bayan
10.00 மணி : சீரிஸ்

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிரைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 12.09.2020 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள அவர்களது அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.